# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 428 பிலவ வருடம், தை மாதம் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(14.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமாஅத்துல் ஆகீர் - 10, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## யாழ். முற்றவெளியில் நடந்த சிறைக்கூண்டுப் பொங்கல்



யாழ். நிருபர்

அரசியல் கைதிகளின் வாழ்வில் ஒளியேற்றவும் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும் விடுதலைப் பொங்கல் நேற்றுக் காலை 11 மணியளவில் முற்றவெளியில் இடம்பெற்றது. 02 பக்கம்

## தைத்திருநாள் தேசமெங்கும் மகிழ்வாக மலரவேண்டும்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொங்கல் வாழ்த்து



இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் தைத்திருநாளானது இன, மத, பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக...

02 பக்கம்




"தமிழன்" வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு இனிய தைத்திருநாள் வாழ்த்துகள்...


## லிட்ரோ கேஸ் நிறுவனத் தலைவர் பதவி நீக்கம்

# அரசுக்குள் இழுபறி!



### பெசிலின் நியமனத்தை தடுத்து நிறுத்திய கோட்டா

லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் தேசர ஜெயசிங்கவை பதவி நீக்கும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் தீர்மானத்தை நேற்று அதிரடியாக தடுத்து நிறுத்தினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

02 பக்கம்

## வளமானதொரு எதிர்காலம் தை நன்னாளில் ஆரம்பிக்கட்டும்

### சபாநாயகர் பொங்கல் வாழ்த்து

பிறந்திருக்கும் தைத்திருநாள் இன பேதங்களின்றி, நாடு முழுவதும் பொங்கல் வழங்கி, கருணை உள்ளத்துடன், ஒத்துழைப்பு,



சமத்துவத்துடன் தற்போதைய கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபடும் வளமான நாளாக அமையட்டும்.

இவ்வாறு சபாநாயகர்...

02 பக்கம்


## பேதங்களை நிர்மூலமாக்கும் தைப்பொங்கல் வைபவம்

### வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

மிக பயபக்தியுடனும் கௌரவத்துடனும் சமைத்த பொங்கல் சாதத்தை அண்டை வீட்டாருடன் பகிர்ந்துகொண்டு பரஸ்பர சகோதரத்துவம், விருந்தோம்பல், நட்பு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தி இவற்றைக்கொண்டு...



02 பக்கம்





மானிப்பாயில் இளைஞர்களுடன் கிரிக்கெட் விளையாடும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்...

### கமெண்ட் கந்தர்..



பொங்கலோ பொங்கல் எண்டு கத்திய மனுசர் இப்போ தொங்கலோ தொங்கல் எண்டு பிரச்சினைகளில தொங்கிக்கொண்டிருக்கும்படியா காலம் மாறிப்போச்சு...

## ரயில் அதிபர்களால் திடீர் வேலைநிறுத்தம்

### மக்கள் பெரும் அவதி

இலங்கை புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னறிவிப்பின்றி ஆரம்பித்ததால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

முன்னறிவிப்பின்றி பல நீண்ட தூர ரயில் சேவைகளை இரத்துச்செய்யும் இலங்கை ரயில்வே நிர்வாகத்தின் தீர்மானத்துக்கு எதிராக இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்தது.

முன்பதிவு கோரிக்கைகளை புகையிரத நிலைய... 02 பக்கம்






## எதிர்வரும் 18 முதல் 21ஆம் திகதிவரை சபை அமர்வுகள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய 19ஆம் திகதி முற்பகல் 1.00 மணிமுதல்... 02 பக்கம்







## லிட்ரோ கேஸ்...

கெரவலப்பிட்டியவில் உள்ள லிட்ரோ நிறுவனத்திற்கு ஜனாதிபதி நேற்று கண்காணிப்புக்காக சென்றசமயம், லிட்ரோ நிறுவனத்திற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிந்தார். பின்னர் திறைசேரியின் செயலாளரை தொடர்புகொண்ட ஜனாதிபதி, புதிய தலைவர் நியமனத்தை நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

லிட்ரோ கேஸ் நிறுவனம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கீழ் வருகிறது. அதனால் இதன் பொறுப்புகள் நிதியமைச்சின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. பெசிலின் தீர்மானத்தை ஜனாதிபதி அதிரடியாக நிறுத்தியமை நேற்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

## ரயில்...

அதிபர்கள் ஏற்க மாட்டார்கள் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

ரயில் பயணங்களை இரத்துச் செய்யும் முடிவால் பொது மக்கள் மற்றும் புகையிரத நிலைய அதிபர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து பெலியத்த, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக்கு நீண்ட தூர சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இந்த வார தொடக்கத்தில் நிர்வாகம் அறிவித்து பயணச்சீட்டுகளை வழங்கியதாகவும், ஆனால் நேற்றுமுன்தினம் திடீரென புகையிரதப் பயணங்களை இரத்துச் செய்ததாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ள ரயில்களுக்கான பயணச்சீட்டுகளை பெருமளவிலான நபர்கள் ஏற்கனவே கொள்வனவு செய்துள்ளதாகவும் இலங்கை ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. அதன் காரணமாகவே தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்ததாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## தைத்திருநாள்..

மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும்.

இவ்வாறு தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா - அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும்.

தைத்திருநாள் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் மத, கலாசார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும்.

தமிழர்கள் தம் வாழ்வில் கொண்டாடி மகிழ்கின்ற பண்டிகைகளில் உன்னதமானதோர் நிகழ்வு இந்த தைத்திருநாளாகும்.

உழவர் பெருமக்கள் தங்களின் கடின உழைப்புக்கு பயன் நல்கிய இயற்கைக்கு, தமது நன்றியுணர்வினைத் தெரிவிக்கும் திருநாளாக இத்தைத்திருநாள் விளங்குகின்றது. அதனால் இத்தைப்பொங்கல் திருநாளிலே அனைவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர். இயற்கையின் பெருமைக்கு முக்கியத்துவம் நல்கும் இத்திருவிழா, நன்றி மறவாத உன்னத பண்பினை நம் அனைவருக்கும் எடுத்தியம்பி நிற்கிறது.

இனம், மதம், மொழி ஆகியவற்றினால் நம் தேசம் வேறுபட்டிருந்தாலும் - நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்று சொல்வதிலே பெருமை கொள்வோம். நம் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாக அமைவதே இத்தேசத்தின் சுபீட்சத்துக்கான அத்திவாரம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் "சுபீட்சத்தின் நோக்கு" என்ற உன்னத இலட்சியத்துடன் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தைத்திருநாளானது இன, மத, பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும்.

அனைத்து மக்களும் நிறைந்த சௌபாக்கியத்துடன், அமைதியும் சமாதானமும் நின்று நிலைக்கும் வகையில், மகிழ்வோடு வாழ இந்த நன்னாளிலே எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இந்த மகிழ்ச்சியான நன்னாளிலே, தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழும் எம் சக உறவுகளாகிய தமிழ் உறவுகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்கிறேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெயர் மாற்றம்

**கற்பிட்டி பிரதேச செயலகத்தின் மாம்புரி கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் கனேஷ் சசிதரன் (GANESH SHASITHARAN) ஆகிய நான் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை கனேஷ் அய்யாஷ் அஹமட் (GANESH AYYASH AHAMAD) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.**

**-கனேஷ் அய்யாஷ் அஹமட்-**

## வளமானதொரு...

மஹிந்த யாப்பா அபேவர்தன விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை உட்பட உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களை ஆர்வத்துடன் ஒன்றிணைக்கும் ஆண்டின் முதலாவது பண்டிகையான தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இறைவன் மீதும் இயற்கை மீதும் மிகுந்த ஈடுபாட்டைக் கொண்ட எமது சகோதர தமிழ் சமூகத்தினர் வாழ்வில் எவ்வாறான இன்னல்கள், கவலைகளுக்கு முகங்கொடுத்திருந்தாலும் அவற்றுக்கும் மத்தியில் தைத்திருநாளை நிச்சயம் கொண்டாடுவார்கள். தமது வயல்களில் விளைந்த புதிய நெற்கதிர்களை அறுவடை செய்வதற்கு தாம் நம்பும் சூரியக் கடவுள் உள்ளிட்ட ஏனைய கடவுளருக்கு நன்றி செலுத்துவதை தமது மரியாதைக்குரிய கடமையாக அவர்கள் கருதுகின்றனர். தமது பயிர்கள் வளர்வதற்கு சூரியக் கடவுளின் பங்களிப்பு, அதனை வளப்படுத்துவதற்கு மழை வழங்கிய பங்களிப்பு, மாடு போன்ற கால்நடைகளுக்கு நன்றி தெரிவிப்பது தைப்பொங்கல் திருநாளின் நோக்கமாகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய நாட்காட்டிக்கு அமைய ஜனவரி மாதம் தை மாதம் என அழைக்கப்படுகிறது. தமது வீடுகளில் சுத்தத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் தமிழ் பெண்களின் அழகிய கோலங்களால் வீடுகளின் முற்றங்கள் அலங்கரிக்கப்படுவது தைத்திருநாளில் மறக்க முடியாத அடையாளமாகும்.

அத்துடன், பல்லாயிரம் ஆண்டுகளாக கொண்டாடப்பட்டுவரும் அற்புதமான தைப்பொங்கல் திருநாள் தமிழ் சகோதர சகோதரிகளுக்கு மாத்திரம் காலத்தால் அழியாத செய்திகளையும் அறிவுரைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. தைப்பொங்கல் திருநாளின் ஊடாக எமக்கு வழங்கப்படும் முக்கிய செய்தி என்னவெனில், கடந்த வருடத்தில் எம்மால் இழைக்கப்பட்ட தவறுகளிலிருந்து திருந்தி புதிய எதிர்பார்ப்புகளுடன் புத்தாண்டை அணுகுங்கள் என்பதாகும். தைத்திருநாளுக்கு முன்னர் பழைய வருடத்தில் அவர்கள் கொண்டாடும் திருநாள் போகிப் பொங்கலாகும்.

பிறந்திருக்கும் தைத்திருநாள் இன பேதங்கள் இன்றி, நாடு முழுவதும் பொங்கல் வழங்கி, கருணை உள்ளத்துடன், ஒத்துழைப்பு, சமத்துவத்துடன் தற்போதைய கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபடும் வளமான நாளாக அமையட்டும்.

## யாழ். முற்றவெளியில்...

சிறைக்கூண்டு போன்ற மாதிரி வடிவமைக்கப்பட்டு அதற்குள் பொங்கல் செய்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது அரசியல் கைதிகளின் உறவுகள், மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பேதங்களை...

பேதங்களை நிர்மூலமாக்கக்கூடிய வைபவமே இந்த தைப்பொங்கல் வைபவமாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

உலக வாழ் இந்து மக்கள் தைப்பொங்கல் பண்டிகையை இறை பக்தியுடன் வெகு விமர்சையாக கொண்டாடும் நாள் இன்றாகும்.

விவசாயம் சார் சமூக கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்து சமூகம், செழிப்பான புத்தாண்டில் தனது முதல் அறுவடையை சூரியபகவானுக்கு பூஜிப்பதை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகின்ற இந்த பண்டிகையானது, பரம்பரை பரம்பரையாக இந்து மக்கள் மிக கௌரவமாகக் கொண்டாடி வருகின்ற வைபவமாகும்.

மனிதர்கள், விலங்குகள் மற்றும் இயற்கையின் மீது அன்பு, கருணை செலுத்துவதை தமது ஒரே நோக்கமாகக் கொண்டு உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

தைப்பொங்கலை மனிதர்களுக்கிடையேயான நட்புறவை வளர்ப்பதற்கான மற்றும் பரஸ்பர புரிதலுக்கான வாய்ப்பாக அறிமுகப்படுத்தலாம்.

தைப் பொங்கலன்று, வீடுகளும் கோவில்களும் கோலம் மற்றும் ரங்கோலிகளால் அலங்கரிக்கப்படுகின்றன. இந்த கொண்டாட்டத்தின் முக்கிய சடங்கு பொங்கல் சாதம் தயாரிப்பதேயாகும். இது வெளிப்புறத்தில் ஒரு அழகான மண் பானையில் சமைக்கப்படும். சூரியக் கடவுளுக்கு முதல் பிரசாதம் வழங்குவது சாதாரண வழக்கமாகும். மிக பயபக்தியுடனும் கௌரவத்துடனும் சமைத்த பொங்கல் சாதத்தை அண்டை வீட்டாருடன் பகிர்ந்து கொண்டு பரஸ்பர சகோதரத்துவம், விருந்தோம்பல், நட்பு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தி இவற்றைக் கொண்டு பேதங்களை நிர்மூலமாக்கக்கூடிய வைபவமே இந்த தைப்பொங்கல் வைபவமாகும்.

அத்தோடு இயற்கையோடு மென்மேலும் நெருங்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கும் இக்காலகட்டத்தில், இயற்கையோடு இணைந்த தைப்பொங்கல் போன்ற கலாசார வைபவங்கள் அவசியப்படுகின்றமை நிதர்சனமே. மனித சமூகத்துக்கு இடையில் சுமுகமான தொடர்பை ஏற்படுத்துவதற்கு துணையாக அமைகின்ற இவ்வகையான அற்புதமான வைபவங்களின் முக்கியத்துவம் அற்பமானதல்ல. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்கைக்கும் மரியாதை செலுத்தும் பக்தி மற்றும் மகிழ்ச்சியாக அமையக்கூடிய தைத்திருநாளாக இத்தினம் அமைய எனது வாழ்த்துகள்.

## எதிர்வரும்..

பிற்பகல் 6.00 மணி வரையும் 20ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையும் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் பிரேரணையாக சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்களுடன் நேற்று (13) முற்பகல் நாடாளுமன்ற வளாகத்தில் நடத்திய விசேட கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். 21ஆம் திகதி பிற்பகல் 10.00 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், பிற்பகல் 4.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கு எதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் (திருத்தச்) சட்டமூலம், சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைத் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை குறித்த இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீசாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அன்றையதினம் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.




# ரயில்வே திடீர் வேலைநிறுத்தத்தால் கோபமடைந்த பயணிகள்!

# புகையிரத பெட்டிகள் மீது கல்வீச்சு

புகையிரத நிலைய அதிபர்கள் நேற்று முன்தினம் (12) நள்ளிரவிலிருந்து திடீர் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்த நிலையில், கொழும்பு கோட்டை முதல் மட்டக்களப்பு வரையில் பயணித்துக்கொண்டிருந்த "மீனகயா" புகையிரதம், கெக்கிராவ புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டதையடுத்து புகையிரதத்தின் மீது கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரவு 11.50 மணியளவில் கெக்கிராவ புகையிரத நிலையத்தை நெருங்கிய மீனகயா புகையிரதம் அந்த புகையிரத நிலையத்தில் நிறுத்தியதன் பின்னர் மீண்டும் பயணிக்காததால் ஆத்திரமடைந்த பயணிகள் புகையிரதப் பெட்டிகள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை சேதப்படுத்தியுள்ளனர். பொலிஸாரின் தலையீட்டில் புகையிரதப் பெட்டிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.







இந்த கல்வீச்சு தாக்குதலில் 6079 என்ற இலக்கம் கொண்ட புகையிரதப் பெட்டிகளிலுள்ள ஜன்னல்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பிலிருந்து பதுளை வரை பயணித்துக்கொண்டிருந்த புகையிரதம் கண்டி புகையிரத நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு 11. 45 மணியளவிலிருந்து போக்குவரத்தை கைவிட்டதைத் தொடர்ந்து பயணிகள் அமைதியற்ற வகையில் செயற்பட்டுள்ளனர். நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொணடுவர பொலிஸாரின் உதவியை நாடவேண்டியிருந்ததாகவும் புகையிரத சேவைப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த புகையிரதத்தில் மாத்திரம் 700 பயணிகள் வரை பயணித்துள்ளதுடன், நேற்றுக் காலை 4.30 மணியளவில் அவர்களை தனியார் மற்றும் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் ஏற்றி அனுப்பிவைத்துள்ளதாக புகையிரத திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது பயணிகள், காரியாலயத்தை ஆக்கிரமிப்பு செய்து கோஷங்களை எழுப்பியதோடு, நேற்றுக் காலை நாட்டில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டிருந்தனர்.

## கல்முனை காணிப் பதிவகத்தில் எண்மருக்கு கொரோனா தொற்று



(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாவட்ட காணிப் பதிவகத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 8 பேர் இனங்காணப்பட்டதையடுத்து எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதிவரை காணிப் பதிவகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உள்ள மேற்படி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையிலேயே இவ்வாறு 8 பேர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார அதிகாரி உறுதிப்படுத்தினார்.

சுமார் 31 உத்தியோகத்தர்களிடம் நேற்று (13) மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையின்போது 8 பேர் இனங்காணப்பட்டதை தொடர்ந்து தத்தமது வீடுகளில் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். மேலும் கொரோனா தொற்று இலங்கையில் பரவலடைந்த பிற்பாடு இக்காணி பதிவகத்தில் 3ஆவது தடவையாக கொரோனா தொற்றாளர்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## இயற்கை விவசாய திட்டம் வடமராட்சியில் ஆரம்பம்!

(நெல்லியடி நிருபர்)

இராணுவம் மற்றும் வடமராட்சி வலயக் கல்வி பணிமனை இணைந்து நச்சுத்தன்மையற்ற உணவு மற்றும் ஆரோக்கியமான தேசத்தை உற்பத்திசெய்யும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வீட்டுத் தோட்டத்தில் நச்சுத்தன்மையற்ற சேதனப் பசனையை பயனபடுத்துவதை ஊக்கிவித்து, பசுமை விவசாயத்தின் தேசிய கொள்கைக்கு ஆதரவளித்து இப்பசுமை வீட்டுத் தோட்டத்தின் மூலம் அனைத்து சமூகங்களுக்கிடையிலும் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திட்டம் வடமராட்சி வலயக்கல்வி வலயத்தால் நேற்று இராணுவம் இணைந்து ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.சத்திதபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட செயலர் க. மகேசன், 55ஆவது படைப் பிரிவு தளபதி பிரிகேடியர் பிரசன்ன குணரத்தின ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி, கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாபரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி மற்றும் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலைகளின் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு இயற்கை முறையிலான இயற்கை உர வகைகளை பயன்படுத்தி மரக்கறி பயிர்ச்செய்கைக்கான செயற்றிட்டத்தை ஆரம்பித்துவைத்ததுடன் இலங்கை ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் முதலாவது செயற்றிட்டமே நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் இத்திட்டத்தை இலங்கையில் முதன்முதலாக வடமராட்சி யில் இராணுவத்தினரின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

## ஐ.தே.கவின் புதிய முகங்கள் அறிமுகம் அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் புதிய முகங்களுக்கான, முதல் குழுவை அறிமுகப்படுத்தும் நிகழ்வு இம்மாதம் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

சுகாதார விதிமுறைகளுக்கமைய இந்நிகழ்வை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன, பொதுச் செயலாளர் பாலித்த ரங்கேபண்டார ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியல் புதிய குழுவை அறிமுகப்படுத்தியதன் பின்னர் இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய முகங்களை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்வுகள் இடம்பெறும் என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்தன் தெரிவித்துள்ளார்.




கொரோனா வைரஸிலிருந்து நம்மைக் காப்பாற்றும் தடுப்பூசியின் மூன்றாம் டோஸை செலுத்திக்கொள்வதா, இல்லையா என்ற விவாதங்கள் சமூகத்தில் எழுந்துள்ளன.

முதலாம், இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப் பெற்றவர்கள், மூன்றாம் தடுப்பூசியைப் பெறுவதில் போதியளவு ஆர்வம் காட்டாமலிருப்பது வேதனையானது. தடுப்பூசியை செலுத்திக்கொண்டால் இன்ன பக்கவிளைவுகள் வரும் என்று அப்போது வதந்திகள் உலாவின. எனினும், தடுப்பூசியை அச்சமில்லாமல் பலர் செலுத்திக்கொண்டனர். இப்போதும் அதேபோல் வதந்திகள் உலாவுகின்றன. ஆனால், அவற்றை நம்பாது முன்னர் போலவே தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள மக்கள் முன்வரவேண்டும்.

இன்றைய நிலையில் இளவயதினரைப் பாதுகாத்து அவர்களுக்குரிய ஆலோசனைகளை வழங்கவேண்டியது அனைவரின் பொறுப்பாகும். ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் தொற்று வயதானவர்களின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கவலை அவர்களின் உடல்நலனில் நம்மை கவனம் கொள்ளச் செய்தது. தற்போது இத்தொற்றின் உருமாற்றத்தின் தாக்கம் சிறுவர்கள், இளைஞர்களின் உடல், மன ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் 90 வீத நாடுகள் கொவிட்-19 பெருந்தொற்று தொடங்கிய நாளிலிருந்து அத்தியாவசிய சுகாதார சேவைப் பணிகளில் இடையூறை சந்தித்து வருகின்றன என்று சமீபத்திய உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வு தெரிவித்துள்ளது.

களப்பணி, மருத்துவமனை சேவையை உள்ளடக்கிய குழந்தைகளுக்குத் தேவையான நோய்த் தடுப்பூசிப் பணிகளில் களப்பணியில் 70 சதவீதமும், மருத்துவமனை சேவையில் 61 சதவீதமும் பாதிப்பு ஏற்பட்டதாக இந்த ஆய்வு கூறுகிறது.

குழந்தைகளுக்கு கொரோனா வைரஸின் பாதிப்பு குறைவு என்ற அனுமானம் ஏற்புடையதல்ல. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஐந்து மருத்துவர்களில் ஒருவர் குழந்தை மருத்துவராக இருந்தார் என்கிறது ஒரு தரவு. எனவே, குழந்தைகள் மட்டுமல்ல, குழந்தை மருத்துவர்கள் கூட தொற்றுக்குள்ளாகியுள்ளமை இலேசான விடயமல்ல.

இருப்பினும், குழந்தைகளிடையே ஏற்படும் தொற்றின் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது. இந்நோயிலிருந்து குழந்தைகளின் மீட்பு விகிதம் 99.99% என்பது ஆறுதல். பெரியவர்களுடன் ஒப்பிடுகையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இருப்பினும், கொவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலகட்டத்தில் குழந்தைகளிடையே பன்மண்டல அழற்சி நோய்க்குறி (மல்டிசிஸ்டம் இன்ஃப்ளமேட்டரி சிண்ட்ரோம்) ஏற்படுவது ஓர் அச்சுறுத்தலாக உள்ளது. பன்மண்டல அழற்சி நோய்க்குறியின் சரியான காரணம் தெரியவில்லை. எனினும், அதன் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 14ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# நம்பிக்கையுடன் முன்னேறுவோம்!

இளமைப் பருவம் என்பது சமூக, உடலியல், உளவியல் மாற்றங்களுடன் இணைந்த நரம்பியல் வளர்ச்சியின் ஒரு முக்கியமான காலம். இளமைக்காலமே பெரும்பாலான மனநலப் பிரச்சினைகள் வெளிப்படும் காலம். மனநலப் பிரச்சினையே இந்த வயதினரின் நோய்க்கும், இறப்புக்கும் முக்கிய காரணமாக விளங்குகிறது. இளமைப் பருவத்தில் ஏற்பட்ட இரண்டாண்டு கால கொரோனா வைரஸ் பரவல், இளைஞர்களின் மனநலத்தைக் கடுமையாக பாதிக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று, உடல் ரீதியான பக்கவிளைவுகளைத் தவிர குழந்தைகளின் நடத்தை மாற்றங்களுக்கும் வழிவகுக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டதால் குழந்தைகளிடத்தில் வலுச்சண்டைக்குப் போகும் உணர்வு, மனச்சோர்வு, பயம் ஆகியவை அதிகளவில் தென்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

கொவிட்-19 காரணமாக குடும்ப உறுப்பினர்களை இழக்க நேரிட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சி, நோய்த்தொற்றுக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சம் ஆகியவை குழந்தைகளிடத்தில் அதிக பதற்றத்தை ஏற்படுத்தியதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

"லான்செட் மருத்துவ இதழ் 21 நாடுகளில் நடத்திய ஆய்வின் அறிக்கை பெருந்தொற்றின் முதல் 14 மாதங்களில் 15 இலட்சம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துவிட்டதாகக் கூறுகிறது. அண்டைநாடான இந்தியாவில் மட்டுமே 1,19,000 குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

கல்வி நிறுவனங்களை திடீரென மூடுவது போன்ற சமூக விலகல் செயற்பாடுகள், குழந்தைகள், இளைஞர்கள் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கற்றல், ஊட்டச்சத்து வழங்குதல், விளையாட்டு, நண்பர்களின் தொடர்பு என இவையனைத்தும் நல்வாழ்வுக்கு முக்கியம். இரு ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலைகளை திடீரென மூடியபோது எந்த அரசாங்கமும் இம்மனநல தாக்கத்தின் விளைவை எதிர்கொள்ள போதுமான திட்டங்களை வகுக்கவில்லை என்பதே உண்மை.

உடற்பயிற்சியின்மை, ஆரோக்கியமற்ற உணவுகள் ஆகியவை குழந்தைகளின் எடைப் பிரச்சினைக்கு வழிவகுத்தன. இவை அவர்களின் உளவியல் நல்வாழ்வை மேலும் பாதிக்கின்றன. பாடசாலை நடவடிக்கைகளிலிருந்து நீண்டகாலமாக விலகியிருந்த சிறுவர்கள் வழக்கமான நிலைக்கு உடனடியாக மாறுவது எளிதாக இருக்காது. கொவிட் -19க்குப் பிந்தைய உலகிற்கு அவர்கள் திரும்பவேண்டுமெனில், அவர்களுக்கு ஆசிரியர், பெற்றோர், மருத்துவர் ஆகியோரின் உதவியும் வழிகாட்டுதலும் கட்டாயம் தேவை.

சிறந்த எதிர்கால சந்ததி உருவாக கல்வி, சுகாதாரம், சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றை மறுவடிவமைத்து, புதுப்பிப்பதற்கான நேரம் இது. நமது சொல்லாலும், செயலாலும் கடுமையான கொள்ளை நோய்த்தொற்றுகளையும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை இளம் மனங்களில் விதைப்போம். கொரோனாவோ அல்லது அதன் திரிபுகளோ குணப்படுத்தக்கூடியவையே. அதனால் இளைஞர்களின் எதிர்காலம் அழிந்துவிடாது என்பதை எடுத்துரைப்போம்.



## நன்றி கூறும் நற்பண்பை வளர்க்கும்

# உழவர் திருநாளாம் தைத்திருநாள்

மிருணாளினி நடராஜன்

தமிழர்களின் நற்பண்புகளான விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளை பிரதிபலிக்கும் ஓர் உன்னத திருநாளாக தைப்பொங்கல் அமைகின்றது.

சூரிய பகவான் ஒரு வருடத்தின் காலநிலையை வரையறுத்து மழை வீழ்ச்சியையும், பயிர்கள் வளர்வதற்குத் தேவையான சாதகமான காலநிலையையும் ஏற்படுத்திக் கொடுப்பதால் உலகில் மானிடர்கள் மட்டுமன்றி, ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு ஓர் உயிர் கொடுக்கும் சக்தியாக இருந்து வருகிறார்.

உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் மானிடப் பிறவிகளான நாம் சூரிய பகவானைத் துதித்து வழிபடவேண்டிய நிலையில் இருக்கின்றோம். சூரிய பகவானின் அனுக்கிரகத்தினால்தான் உலகில் பயிர்கள் செழித்து வளர்ந்து எமக்குத் தேவையான உணவை பெற்றுக்கொடுக்கின்றன.

நதிகளிலிருந்தும், நீர்த்தேக்கங்களிலிருந்தும் நீரைப் பயன்படுத்திய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களை பொன் விளையும் பூமிகளாக மாற்றுகின்றார்கள்.

நாற்சதுரமாக நாற்புறமும் வாசல் வைத்து, கோலம் போட்டு குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பெற்ற இடத்தை நான்கு கம்புகள் நட்டு அதில் நூல் கட்டி தோரணம், மாவிலை தொங்கவிடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில் புதிதாக மண்ணினால் பிடித்து வைத்த மூன்று அடுப்புக் கட்டிகளையும் வைத்து பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பைத் தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கும் முன் வீட்டின் பூஜையறையில் தீபமேற்றி வணங்கியபின் சூரிய பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஸ்தோத்திரங்கள் பாடி நிற்க சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து (பிள்ளையார் சிலையும் வைக்கலாம்), நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றி, தேங்காய் உடைத்து வைத்து தூபம், தீபம் காட்டி விநாயகரை வழிபட்டபின், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானையின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி (காப்புக் கட்டி), விபூதிக்குறிகள் வைத்து, திலகமிட்டு புனிதமாக்கி அதனுள் நீரும், பசும்பாலும் விட்டு அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி வழியும்வரை நெருப்பைக் கூட எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரித்து வீட்டுத் தலைவர் இரு கைகளினாலும் புது அரிசியைக் கிள்ளி மூன்று முறை வலப்புறமாக சுற்றி பானையிலிட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

அப்போது சர்க்கரைப் பொங்கலாயின் பயிற்றம் பருப்பு, சக்கரை, கஜு, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாக தைப் பொங்கலின்போது சர்க்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம். ஆனால், சிலர் வெண்பொங்கலும், சாம்பாரும் வைப்பார்கள். சிறுவர்கள் வெடிகளைக் கொளுத்தி, மகிழ்ச்சியோடு ஆடிப் பாடுவர்.

பால் பொங்கி அரிசி போட்டபின் பானையிலிருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத்திரத்தில் எடுத்து அதனை பூஜைகள் முடியும் வரை வைத்திருந்து அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும்படியாக தெளிப்பார்கள். அந்நீரில் சூரியனின் சக்தி இருப்பதால், சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டுப் பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது அவர்களின் நம்பிக்கை.

வேளாண்மைக்கு வேண்டிய மழை நீரையும், சூரிய ஒளியையும் (வெயிலையும்), காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும், நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வளிமண்டலம், நீர்நிலைகள் போன்றவற்றிற்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

தற்பொழுது பொங்கல் விழாவானது முன்புபோல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக்கூடங்கள், தொழில் நிலையங்களிலும், இந்துக்கள் அல்லாத தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சிறப்படைகின்றது.

தைப்பொங்கல் பண்டிகையின்போது உழவர்கள் தாம் அறுவடைசெய்த நெற்கதிர்களை அரிசியாக்கி அதில் பொங்கல் செய்து கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்று செய்து புதிய அரிசியை வாங்கிப் பொங்கல் செய்து கொண்டாடுகின்றார்கள்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் அதிகமாக வாழும் கனடாவிலுள்ள மிகப்பெரிய "மார்க்கம்" மாநகர சபை ஒவ்வொரு வருடத்திலும் வரும் ஜனவரி 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளை தமிழர்களின் பாரம்பரிய நாட்களாகவும், தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ளதுடன், தை மாதத்தை தமிழர்களின் புனித மாதமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டிகையையும், அதனோடு தொடர்புடைய மாதத்தையும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்த முதல் வெளிநாட்டு மாநகர சபை என்ற பெருமையை மேற்படி "மார்க்கம் நகர சபை" பெற்றுள்ளது.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப்பொங்கலுக்கு முன்னர்) ஒரு நல்ல நாள் பார்த்து "புதிர் எடுத்தல்" நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்துப் பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைப் படைத்து தேங்காய் உடைத்து விநாயகரையும், குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டு செல்வார். இதேநேரம் குடும்பத்தலைவி தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்குவதற்குத் தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டு வருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி பூஜையறைக்குக் கொண்டுசெல்லும் வழக்கம் உண்டு. அதன் பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை பூஜையறை மற்றும் சமையல் அறைகளில் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப்பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். கடின உழைபின் மூலம் கிடைக்கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் "புதிர்" எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டுக்கு குறைவிருக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம் வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும்போதே முதல் நல்விருந்தாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள்.

எல்லோரும் அதிகாலையில் குளித்து, வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவினால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சீமெந்தினால் ஆனதாயின் அதனை சுத்தம் செய்து கழுவி கோலம் போடுவார்கள். அத்துடன் வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டி சூரிய பகவானை வரவேற்கத் தயாராக இருப்பார்கள்.

05ஆம் பக்கம் பார்க்க...

# இன்றைய நாளில்...

* 1690 – கிளாரினெட் இசைக்கருவி ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது.
* 1865 – இலங்கையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர்.
* 1907 – ஜமெய்க்காவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
* 1950 – சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.
* 1974 – திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பிரித்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
* 1995 – சந்திரிகா அரசு - விடுதலைப் புலிகள் இடையேயான 3ஆவது கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
* 1996 – உலகின் முதலாவது 24 மணிநேர தமிழ் வானொலி ஒலிபரப்பு, கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது.
* 2005 – சனிக்கோளின் டைட்டான் நிலவில் ஐரோப்பாவின் இயூஜென் விண்கலம் இறங்கியது.
* 2011 – துனிசியாவின் அரச தலைவர் பென் அலி, சவூதி அரேபியாவிற்குத் தப்பி ஓடினார். அரேபிய வசந்தம் ஆரம்பமானது.
* 2015 – திருத்தந்தை பிரான்சிஸ், யோசப் வாஸ் அடிகளை கொழும்பில் புனிதராகத் திருநிலைப்படுத்தினார்.

## நக்கல் நமசிவாயம்



## பொங்கல் எப்படி இன்றிங்கே இனிக்கும்!

உழவனின் வயல்கள் உரமின்றி ஏக்கம்!
ஊரெல்லாம் மக்கள் உணவின்றி தாக்கம்!
பொருட்களின் விலையால் நாடே தயக்கம்!
பொங்கல் எப்படி இன்றிங்கே இனிக்கும்!


பால் தரும் மாடுகள் மேயவும் தொல்லை!
பஞ்சம் பசி பட்டினி இதுதான் நிலை!
பாலர் அருந்தும் பால் மாவும் விலை!
பாண், அரிசி, பருப்பு, சீனியும் இல்லை!

பழங்கள் படைத்து பகலவனை வணங்கி!
பட்டாடை உடுத்து கோயில்கள் சென்று!
பட்டாசு கொளுத்தி கொண்டாட்டமில்லை!
பாரம்பரியத்தை விட மனமும் வரவில்லை!

தமிழர் திருநாள் என்பதால் நாங்கள்!
தனித்துவமாக பொங்கலை போற்றுவோம்!
தை பிறந்தால் வழி பிறக்குமோ தெரியாது!
தன்னம்பிக்கையை கை விடாமல் வாழ்வோம்!

சூரியனுக்கு நன்றி நாம் செலுத்துவோம்!
சுகமாக வாழவே பொங்கிப் படைப்போம்!
சுற்றமும் நித்தமும் அன்பைப் பெருக்குவோம்!
பற்றுடன் தமிழராய் பண்பாட்டை காப்போம்!

-அம்பிளாந்துறையூர் அரியம்-



## உத்தமமான பொங்கல்




பொங்கலோ பொங்கலென – நாம்
பொங்கி மகிழும் பொங்கல்
திங்களாகி திகைக்க வைத்த
திண் சுவை பூத்த பொங்கல்
பங்கமில்லா தங்கமான உதித்த
பாகா விட்ட பொங்கல்
மங்கை வாழ்வை மகிழ வைத்த
மனம் கவர்ந்த தைப்பொங்கல்

மகளிர் ஏக்கத்தை மகிழ்ச்சி தர
மன்றில் உதித்த பொங்கல்
பகலில் பாங்கா பவனி வரும்
பால் பொங்கும் பொங்கல்
நிகரில்லா நிம்மதியை நித்தலம்
நீட்சியாக தரும் பொங்கல்
வகை வகையான பொங்கலிட்டு
வாழ்த்துரைக்கும் பொங்கல்
பகை ஒழிந்து பசுமை படர
பாங்கான பால் பொங்கல்

உழைத்தவர் உழைப்போர் - உயர்வென
உன்னதமான உண்மை பொங்கல்
பிழைத்தவரின் பித்தலாட்டம் ஒழிந்து
பிறந்து விட்ட பொங்கல்
தழைத்து விட்ட ஒற்றுமை உணர்வு
தரணி சிறக்க வந்த பொங்கல்
அழைத்த அன்பர்களுக்கு அமுதூட்டி
ஆர்ப்பரிக்கும் அன்பு பொங்கல்
உலகுக்கும் உழவரின் உழைப்பு கூறும்
உத்தமான பொங்கல்

உடப்பூர் வீரசொக்கன்



# நன்றிகூறும் நற்பண்பை

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை "தலைப் பொங்கல்" என வெகு சிறப்பாக கொண்டாடுவார்கள். வீட்டிற்கு வெள்ளையடித்து, வீட்டை அலங்கரித்து, தாமும் புத்தாடை அணிந்து சூரிய பகவானின் ஆசியைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். துக்கமான நிகழ்வுகள் நிகழ்வுற்ற குடும்பத்தினர் பொங்கல் விழாவை ஒரு வருடத்திற்கு தவிர்த்துக்கொள்வார்கள்.

பொங்கிய பொங்கலை ஒரு தலைவாழை இலையில் படைத்து அதன் மேல் பகுதியை குழிவாக்கி அதன் மேல் வாழைப்பழத்தை உரித்து வைத்து அதன் மீது தயிர் விட்டு, சர்க்கரையும் வைப்பார்கள். பலகாரங்களை (வடை,மோதகம், முறுக்கு) என்பனவற்றை இன்னொரு தலைவாழை இலையிலும், சுத்தம் செய்த பழங்களை வேறொரு தலைவாழை இலையிலும் படைப்பார்கள்.

படையல் படைக்கும்போது சூரியனுக்கு வலப் பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்குபடி படைத்தல் வேண்டும்.

வாழை இலைகளில் படைத்த பின், தேங்காய் உடைத்து வைத்து சூரிய பகவானுக்கு தூப, தீபம் ஆரத்தி எடுத்து அனைவரும் பக்தியோடு பஜனை பாடி சூரியனை வணங்குவார்கள். சூரியனுக்கு படைத்த (படையல்) பொங்கலை அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்ந்து பொங்கல் தினத்தை சிறப்பாக கொண்டாடுவார்கள்.

உறவினர்கள், நண்பர்கள் துக்க நிகழ்வுகள் (ஆசூசம்) அல்லது வேறு சமூகத்தவர் என்னும் காரணமாக பொங்காது இருந்தால் அவர்களுக்கும் தமது பொங்கலை பரிமாறி அவர்களையும் மகிழ்விப்பார்கள். பொங்கல் பண்டிகை நாளில் ஊரில் பல பாகங்களிலும் தமிழன் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் முத்தமிழ் (இயல், இசை, நாடக) கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். அவற்றிலும் மக்கள் பங்கேற்று மகிழ்ச்சி பொங்குவர்.

**"பட்டிப் பொங்கல்/மாட்டுப் பொங்கல்"**

பொங்கல் தினத்திற்கு அடுத்தநாள் "பட்டிப் பொங்கல்/மாட்டுப் பொங்கல்" தினமாக உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்துக்கு நன்றி கூறும் கொண்டாடும் வழக்கமும் அவர்களிடம் உண்டு.

உழவனின் நண்பனாக இருந்து உழைத்த (மாடாக உழைத்த) மாடுகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக பட்டிப் பொங்கல் கொண்டாடும் மரபு காணப்படுகிறது.

அன்றைய தினம் மாடுகளைக் குளிப்பாட்டி, விபூதி குறிகள் வைத்து, சந்தனம், குங்குமத்தால் பொட்டிட்டு, மலர் சாத்தி அல்லது மலர்மாலை அணிவித்து, மாட்டின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி அலங்கரித்து; "பொங்கலோ பொங்கல், பட்டிப் பொங்கல் மனசு பெருக, பால் பானை பொங்க, நோயும் பிணியும் தெருவோடு போக" என்று மாட்டுத்தொழுவத்தில் பொங்கல் பொங்கி மாட்டை கடவுளாக மதித்து அதற்கு படையல் படைத்து உண்ணக் கொடுத்து, தாமும் உண்டு மகிழ்வர்.

மாடு உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பார்கள். பட்டிப்பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளிலும் மக்கள் கலந்துகொண்டு மகிழ்வார்கள்.

**அருவி வெட்டு:**

வீட்டு சாமியறையிலும், சமையலறையிலும் கட்டப்பட்ட "புதிர்" நெல் அடுத்த வருடம் புதிர் எடுக்கும் வரை அப்படியே இருக்கும். பொதுவாக பொங்கல் தினம் முன்பாகவே அருவி வெட்டு நிகழ்ந்திருக்கும். அல்லது நெல் விளையாது இருந்திருந்தால் பொங்கல் முடிவடைந்த பின்னர் வசதியான ஒரு நாளில் "அருவி வெட்டு" இடம்பெறும்.

பொதுவாக விதைக்கப்பெற்ற நெல்லின் வர்க்கத்தைப் பொறுத்தே அதன் விளைவு காலம் இருக்கும். சில நெல் 3, 4 மாதங்களில் பூரண விளைவை அடைந்து விடும்.

பாடுபட்டு உழைத்த உழைப்பின் மூலம் கிடைத்த நெற்கதிர்களை அறுத்து காயவைத்து "சூடடிப்பார்கள்". சூடடிப்பிற்கு முற்காலத்தில் மாடுகளே அதிகம் பயன்படுத்தப்பட்டன. ஆனாலும் தற்காலத்தில் ட்ரக்ரர்களின் பயன்பாடு அதிகமாக காணப்படுகிறது. எந்த முறை மூலம் என்றாலும் சூடடித்த நெற்தானியங்களை வீட்டுக்கு கொண்டு சென்று சாமியறைகளில் வைக்கும் வழக்கம் இன்றும் அங்கு காணப்படுகிறது.

நெல் தானியம் என்பது செல்வங்களுள் முக்கியமான ஒன்றாக அவர்களால் கருதப்படுகிறது. எனவே, இறைவன் இருக்கும் இடத்தில்தான் செல்வம் இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாகும். அதனால் சாமியறையில் தங்கள் உழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற செல்வங்கள் அனைத்தையும் மூட்டைகளாக கட்டி வைக்கிறார்கள்.

சூடு அடிக்கப்பெற்றபின் எஞ்சியிருக்கும் வைக்கோலைக் காயவைத்து, கால்நடைகளுக்கு உணவு தட்டுப்பாடான நேரம் கொடுப்பதற்காக குவியலாக குவித்து வைப்பார்கள். புதிர்களை எடுத்து அவற்றை இளம் பசுக்கன்றின் சாணத்துடன் சேர்த்துக் குழைத்து அதனைக் காயவைத்து விபூதி செய்வதற்காக பாவிக்கின்றார்கள்.

அறுவடை மூலம் கிடைக்கும் நெல்லில், தமக்கு உதவி புரிந்த தொழிலாளர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தபின், தமக்குத் தேவையானவற்றை சேமித்து வைக்கிறார்கள். மிகுதியானவற்றை விற்றுவிடுவார்கள். அவர்களின்



உழைப்பின் மூலம் கிடைக்கின்ற செல்வம் தை மாதத்தில் கிடைக்கப் பெறுவதனால் போலும் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழி தோற்றம் பெற்றிருக்கிறது. தை மாதத்தில் அவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாக காணப்படும்.

இதன் காரணமாக திருமணங்கள் போன்ற நல்ல நிகழ்ச்சிகளை அதிகமாக தை மாதத்தில் தமிழர்கள் நடத்துவார்கள். ஆண்டுதோறும் தை மாதம்முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாதங்கள் உத்தராயணம் என்றும், ஆடிமுதல் மார்கழி வரையுள்ள மாதங்கள் தட்சிணாயணம் என்றும் கூறப்படுகிறது. இதில் தை மாதம் முதலாம் திகதியை மகர சங்கராந்தி, தைப் பொங்கல் என்று கொண்டாடுகிறோம்.

"உழவர் சேற்றில் கால் வைத்தால்தான் ஏனையோர் சோற்றில் கை வைக்க முடியும்" என்பது பலரும் அறிந்த பழமொழி.

அதனால் போலும் பொங்கல் என்பதற்கு "பொங்கி வழிதல்", "பொங்குதல்" என்பது பொருள். அதாவது புதிய பானையில் பால் பொங்கி எழுந்து பொங்கி வழிந்து வருவதால், எதிர்காலம் முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும் என்பதும், களனியெல்லாம் பெருகி, அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதும் இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும், தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.





அனைத்து உள்ளங்களிலும்
அன்பும் ஆனந்தமும் பொங்கட்டும்

புதிய அபிலாஷைகளுடன் பிறக்கும் தமிழர் தைத்திருநாள் அனைவருக்கும்
நோய் நொடிகளற்ற சகல வளங்களையும் செல்வங்களையும் நல்கி தேசத்தினை
வளம் பெறச் செய்யட்டும்.

இலங்கை வங்கியின் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# இன்றைய ராசி பலன்

14.01.2022 வெள்ளிக்கிழமை தை 01

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: ரோகிணி**
இரவு 8.18 வரை
**மிருகசீரிடம்**
இரவு 8.18 - 15.01.2022
இரவு 11.21 வரை
**யோகம்: சுப்ரம்**
பிற்பகல் 1.36 வரை

**பிராம்யம்**
பி.ப 1.36 - 15.01.2022
பிற்பகல் 2.34 வரை
**திதி:பூர்வ பட்ச துவாதசி**
இரவு 10.19 வரை
**பூர்வ பட்ச திரயோதசி**
இரவு 10.19 - 16.01.2022

அதிகாலை 12.57 வரை
**முற்கரணம்: பவம்**
காலை 8.56 வரை
**பிற்கரணம்: பாலவம்**
காலை 8.56 -இரவு 10.19

**சுப நேரங்கள்**
காலை 6.27 - 7.54
மாலை 5.12 - 6.13

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 10.51 - பி.ப 12.20

**குளிகை காலம்**
காலை 7.55 - 9.23
**எமகண்ட காலம்**
மாலை 3.16 - 4.44
**துர் முகூர்த்தம்**
காலை 8.48 - 9.35
பிற்பகல் 12.43 - 1.30

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** குடும்ப விடயங்களில் வீட்டினரைத் தவிர்ந்த பிறரின் தலையீட்டை தவிர்ப்பது நன்மை. பணியிடங்களில் பதவி உயர்வு ஏற்படலாம். இந்த நாள் சில விடயங்களில் சாதகமாக அமையாமல் இருக்கலாம். சில வேலைகளுக்கு நிதி குறைவு ஏற்படலாம். இறை தியானம் தேவை.

**ரிஷபம்:** வாழ்க்கைத்துணையுடன் உணர்வுகளை பகிர்தல் உண்டாகலாம். வணிக இலாபங்கள் மேம்படும். உடல்நலம் நல்ல நிலை பெறலாம். வேலைத்தளங்களில் பணிச்சுமை குறையலாம்.

**மிதுனம்:** இன்று எந்தச் சூழ்நிலையிலும் மன உறுதியை உயர்வாக வைத்திருத்தல் தேவை. பணிகளில் மேலதிகாரிகளின் அதிருப்தி உண்டாகலாம். தேவையற்ற விடயங்களில் செலவு ஏற்படலாம். பிறரின் பொறுப்புகளை பாரம் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. இறை வணக்கம் நன்மை.

**கடகம்:** திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம். புதிய தொழில் துவங்க சாதகமான நாள். சமூக மதிப்பு உருவாகலாம். காதலர்களுக்கு தங்கள் குடும்பத்தினருடன் திருமண விடயங்களை பற்றிய கலந்தாய்வு ஏற்படலாம்.

**சிம்மம்:** இல்லத்தில் வளங்களுடன் அமைதியும் நிலவும். சமூகத்தில் உங்களை போற்றும் நிலை உருவாகலாம். நண்பர்களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கலாம். இன்று குடும்பம் சம்பந்தப்பட்ட நல்ல முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம்.

**கன்னி:** வெளிநாட்டு நிறுவனங்களில் பணி கிடைக்கப் பெறலாம். கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். உறவுகளுடன் நல்ல நிலை உருவாகலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல பதவி கிடைக்கப் பெறலாம்.

**துலாம்:** நற்பெயருக்கு களங்கம் உண்டாக்கும் தொடர்புகளை தவிர்ப்பது நல்லது. இன்று புதிய முதலீடுகளை தவிர்ப்பதும் நன்மை. பிறருடன் பேசும் சொற்களின் கட்டுப்பாட்டில் கவனம் தேவைப்படலாம். சில மனக்கவலை ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.
சந்திராஷ்டமம்: சுவாதி நட்சத்திரத்திற்கு பிற்பகல் 1.30 வரை விசாகம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு பி.ப 1.30 - 15.01.2022 காலை 9.51 வரை

**விருச்சிகம்:** நிதி விடயங்களில் சாதகமான நாளாக அமையலாம். சிலரின் எதிர்ப்புகளில் உங்கள் ஆளுமையே மேம்படும். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வாழ்க்கைத்துணைக்கு உங்களால் பரிசு வழங்கப்படலாம்.
சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 4க்கு 15.01.2022 காலை 9.51- மாலை 4.37 வரை அனுஷம் நட்சத்திரத்திற்கு 15.01.2022 மாலை 4.37- 16.01.2022 இரவு 7.29 வரை

**தனுசு:** உங்கள் நலம் விரும்புபவர்கள் உங்கள் தொழில் சிறப்புறுவதற்கு துணை இருக்கலாம். காப்பீடு முதலீட்டு இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். வணிகம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மகரம்:** நற்பெயருக்கு களங்கம் தரும் தீமையான பழக்கங்களை தவிர்ப்பது மேன்மை. வீட்டில் வயது முதிர்ந்த உறவுகளில் அன்பான அரவணைப்பு தேவைப்படலாம். எலும்பு வலி சிறியளவில் உண்டாகலாம். காதலில் அர்ப்பணிப்புடன் இருக்கும் நிலை உருவாகலாம்.

**கும்பம்:** சீரான வாழ்க்கை முறை மற்றும் உணவு விடயத்தில் கட்டுப்பாடு நன்மை பயக்கலாம். செரிமான பிரச்சினைகள் சிறியளவில் ஏற்படலாம். சில ஏமாற்றங்களும் அடையலாம். சில கடந்த கால விடயங்களில் கவலை உண்டாகலாம். இறைவணக்கத்தால் மன அமைதி மற்றும் நன்மை கிடைக்கலாம்.

**மீனம்:** ஆன்மீக செயல்களில் ஈடுபாடு ஏற்படலாம். வேலைத்தளங்களில் புதிய அதிகாரம் கிடைக்கப் பெறலாம். இன்று வணிக மாற்றங்களை செய்ய சாதகமான நாள். குடும்பத்தினரால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கலாம். வாழ்க்கைத்துணையுடன் இன்று இனிமையான நாளாக அமையலாம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 13.01.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 031 8407 | 037 87 3 |
| கனேடியன் டொலர் | 046 4751 | 052 387 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 827 | 21 0882 |
| யூரோ | 115 52 6 | 124 4 30 |
| ஜப்பான் யென் | 0 6108 | 0 6758 |
| சிங்கப்பூர் டொலர் | 036 003 | 040 6204 |
| ஸ்ரேலிங் பவுன் | 16 7736 | 168 2484 |
| சுவிஸ் பிரான்ங் | 104 61 0 | 112 2776 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 0763 |
| குவைட் | குவைட் தினார் | 556 342 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 0 74 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 31 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 65 3 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8254 |

# புகையிரத நிலைய அதிபர்கள் வேலைநிறுத்தத்தால் மலையக ரயில் போக்குவரத்து சேவைகள் பாதிப்பு






(க.கிஷாந்தன்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத நிலைய அதிபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவுமுதல் மேற்கொள்ளப்பட்ட 24 மணித்தியால அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்று (13) மலையக புகையிரத சேவைகள் பாதிப்புக்குள்ளாகின.

நேற்று அதிகாலை நானுஓயாவிலிருந்து கண்டி செல்லவிருந்த புகையிரதம் நானுஓயா புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

புகையிரத நிலைய அதிபர்கள், உறுப்பினர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமை, சாதாரண அட்டவணையை அமுல்படுத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டு ஆசனங்கள் ஒதுக்கீடு செய்து அதன் பின்னர் புகையிரதங்கள் இரத்துச்செய்யப்படுகின்றமை, இதனால் புகையிரத பயணிகளும் புகையிரத நிலைய அதிபர்களும் பாதிக்கப்படுகின்றமை உள்ளிட்ட சில கோரிக்கைகளை நிறைவேற்ற கோரியே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள், அரச ஊழியர்கள் என பலர் பாதிப்புக்குள்ளாகினர்.

பாடசாலை மாணவர்கள் புகையிரத வேலை நிறுத்தப் போராட்டத்தினை அறியாது புகையிரத நிலையங்களுக்கு வருகை தந்து ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதேநேரம் பயணிகள் சிலரும் தங்களது பயணத்தினை புகையிரதம் ஊடாக தொடர முடியாது பஸ் தரிப்பிடங்களை நோக்கி செல்வதனை காணக்கூடியதாக இருந்தன.

இன்றுமுதல் தொடர் விடுமுறையொன்று காணப்படுவதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் சிவனொளிபாதமலையை தரிசனம் செய்வதற்காக வருகை தரவிருந்த போதிலும், புகையிரத அதிபரிகளின் வேலை நிறுத்தம் காரணமாக நேற்று புகையிரத நிலையத்தில் வழமைக்கு மாறாக விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே வருகை தந்திருந்தமையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகும்

## பைஸர் முஸ்தபா கொழும்பில் தெரிவிப்பு

(மினுவாங்கொடை நிருபர் )

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முகவரி தொலைந்துவிட்டது. அது இனிமேல் அழிந்தொழிந்து போய்விட்டது என இன்று சிலர் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அதன் முகவரி இன்னும் தொலையவில்லை. அதே முகவரியில் புதுப்பொலிவுடன் அதன் எதிர்காலத் திட்டங்களை பாரியளவில் முன்னெடுத்துச் செல்வோம் - என முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளருமான பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு கிளைக் காரியாலயம் அண்மையில் கொழும்பு மருதானையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோர் இணைந்து இப்புதிய காரியாலயத்தைத் திறந்து



வைத்தனர்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, துமிந்த திசாநாயக்க, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன உள்ளிட்ட கொழும்பு மாநகர சபையின் ஸ்ரீல.சு.க. உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று மக்கள் சொல்லொண்ணா வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்றனர். குறிப்பாக, குடிசைகளிலுள்ள கொழும்புவாழ் மக்கள், பாரிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலைமையை மாற்றியமைக்கவே சுதந்திரக் கட்சி களத்தில் இறங்கியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி நாடளாவிய ரீதியில் பாரிய வெற்றியைப் பெறும். கொழும்பு மாநகர சபையையும் கைப்பற்றி, மேயருக்கான இருப்பிடத்தையும் தனதாக்கிக்கொள்ளும்.

இதற்காக, நாம் தற்போதிருந்தே எமது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

எனவே, நாம் அனைவரும் தற்போதிருந்தே ஆயத்தமாக வேண்டும். சுதந்திரக் கட்சி எனும் கட்சியின் நிழலில் ஒன்றுபட்டு கை கோர்த்து அணிதிரள வேண்டும் - என்றார்.




உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிபெருமாள் ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவ உற்சவத்தின் இரதோற்சவம் நேற்று (13) இடம்பெற்றது. (படங்கள்:- உடப்பு நிருபர்)

# கொஹுவலையில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஹங்கேரிய நிதியுதவியுடன் கொஹுவல மேம்பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆளுந்தரப்பு பிரதம நெடுஞ்சாலை அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ஹங்கேரிய வர்த்தக மற்றும் வெளிவிவகார அமைச்சர் பீட்டர் சியார்டோ ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் கொஹுவல சந்தியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த மேம்பாலம் கொஹுவல சந்தியிலிருந்து கொழும்பு - ஹொரணை 120 பஸ் மார்க்கத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது. மேம்பாலம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர், மேம்பாலத்திற்கு கீழ் பகுதியினால் நுகேகொட - களுபோவில வீதிக்கு செல்ல முடியும். ஹங்கேரி அரசாங்கத்தின் நிதி உதவியுடன் கொஹுவல மேம்பாலம் 297 மீற்றர் நீளமும் 9.4 மீற்றர் அகலமும் கொண்டதாக அமைக்கப்படுகிறது.




மேலும், மேம்பாலத்தின் கீழ்ப் பகுதியில் நான்கு வழிப்பாதை அமைக்கப்படவுள்ளதுடன் நுகேகொட - களுபோவில வீதியில் போக்குவரத்து சமிக்ஞைகளை பயன்படுத்தி போக்குவரத்து கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்திற்கான மதிப்பீடு 2648 மில்லியன் ரூபாவாகும். இந்தத் திட்டம் 22 மாதங்களில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

(யாழ் நிருபர்)

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசம்பர் 19ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டதுடன் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மீனவர்களின் விளக்கமறியலை ஜனவரி 27ஆம் திகதிவரை நீதிமன்று நீடித்துள்ளது.







கண்டி மாநகர சபை வரலாற்றில் முதன்முதலாக பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது. மாநகர சபையின் உறுப்பினர்களும் இந்த பொங்கல் விழாவில் கலந்துகொண்டனர். பிரதம விருந்தினராக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே, சிறப்பு விருந்தினராக கண்டி மாநகர சபை முதல்வர் கேசர சேனநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள் - கண்டி இராமன்)

# நன்றிக்கு தலை வணங்கும் நாளாக தைத் திருநாளை வரவேற்போம்!

## அமைச்சர் டக்ளஸின் பொங்கல் வாழ்த்து

சூரியனுக்கு பொங்கிப் படைத்து நன்றிக்கு தலைவணங்கும் பண்பாட்டு நாளாக தைப்பொங்கல் திருநாளை வரவேற்போம் - என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில்,

"நன்றிக்கு தலை வணங்குதல் என்பது தொன்றுதொட்டு நிலவிவரும் தமிழர் பண்பாட்டு வழிமுறையாகும்.

உழுதுண்டு வாழும் உழவர் மக்களின் விளைநிலங்கள் யாவும் செழித்து வளர உதவிய சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதோடு மட்டுமன்றி, எமது மக்கள் தம் வாழ்வெங்கும் தம்மோடு கூடவே இருந்து தம் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவோருக்கும் அறம் சார்ந்த, அவலங்கள் இல்லாத யதார்த்த வழிமுறையில் தம்மை வழிநடத்தி செல்வோருக்கும் நன்றி செலுத்தும் பண்பாட்டையும் இன்னமும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும், வழி பிறந்தால் தம் வாழ்வு செழிக்கும். இதுவே எமது



மக்களின் ஆழ்மனது நம்பிக்கை!

ஆனாலும், நம்பிக்கைகளும் அதற்கான வேண்டுதல்களும் மட்டும் இருந்தால் போதாது.

குறையிலா உயிர்கள் வாழும் மகிழ் காலத்தையும் தமது எதிர்காலத்தையும் எமது மக்கள் தாமே உருவாக்கும் தீர்மானங்களை தம் கைகளில் எடுக்க வேண்டும்.

உங்கள் இலட்சியத்தில் தோற்றீரானால் சூட்சுமத்தை மாற்றுங்கள், இலட்சியத்தை அல்ல என்ற கீத தர்ம உபதேசங்களை ஏற்று. எமது மக்கள் தமது கனவுகளை எட்டுவதற்கு இதுவரை முயன்று தோற்றுப்போன வழிமுறைகளை கைவிட்டு, நாம் சொல்லும் நடை முறை சாத்தியமான நற்சிந்தனைகளை இன்னமும் ஏற்று நடந்தால், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ நீதியின் உரிமை நோக்கி வெற்றியின் நம்பிக்கையோடு நடக்க முடியும்.

உலக நாடுகளெங்கும் சூழ்ந்திருக்கும் கொடிய நோயின் தாக்கங்கள் இலங்கை தீவையும் சூழ்ந்திருக்கிறது. சூழ்ந்து வரும் துயர்களை உடைத்து சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவில் வென்றெடுப்போம்!

அறம் காப்போரை அறம் காக்கும். அறம் வெல்லும், அநீதி தோற்கும்! எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும்!"

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எதிர்கால நம்பிக்கையோடு தைப்பொங்கல் திருநாளை கொண்டாடி மகிழும் சகல மக்களுக்கும் புது வாழ்வு பூக்கட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய தினம் மகிமை பொருந்திய நாளாகும்!

## ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில்

உலகெங்கிலுமுள்ள தமிழ் மக்கள் தை மாதத்தில் கொண்டாடும் தைத்திருநாள் மத, கலாசார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியமான மகிமை பொருந்திய நாளாகும். இந்த புனித நாளை முன்னிட்டு இலங்கை மற்றும் உலகவாழ் தமிழ் மக்களுக்கும் எனது தைத்திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் - என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

விவசாயத்தை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் இன்றைய நாளில் சூரிய பகவானை பக்தியுடன் வணங்கி நன்றி செலுத்தி, வாழ்வில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்றனர். இயற்கையின் பெறுமதி சமத்துவத்திற்கு மதிப்பளிக்கவேண்டியதன் முக்கியத்துவம், நன்றி தெரிவிக்கும் உயரிய பண்பு போன்ற அனைத்து மதங்களினதும் மனித மையக்கருத்துகளை தைப்பொங்கல் பண்டிகை எமக்கு எடுத்தியம்புகின்றது.

தைப்பொங்கல் கொண்டாட்டங்களினால் மக்கள் மத்தியில் உருவாகும் புதிய



பிணைப்புகள் குடும்ப அலகுகளிலிருந்து ஒட்டுமொத்த சமூகத்திற்கும் விரிவடைந்து செல்கின்றன. இதனூடாக மனிதநேயமிக்க சமூக பிணைப்புகள் மென்மேலும் பலமடையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இதற்கமைய தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் கொண்டாடப்படும் தைத்திருநாள், அனைவரது வாழ்க்கையிலும் வளம், நலம், செழிப்பு, மகிழ்ச்சி உள்ளிட்ட எல்லா நலன்களும் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகள் நீங்கி செழிப்பு மலரும் நாளாக தைத்திருநாள் அமையட்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன்



(தலவாக்கலை நிருபர்)

தைத் திருநாளாம் தைப்பொங்கலை கோலாகலமாகக் கொண்டாடும் அனைத்து இந்து பெருமக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் தான் மகிழ்ச்சியடைவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள தைத் திருநாள் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வாழ்த்துச் செய்தியில்,

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்லுகின்றார்கள். எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து சூரியனுக்கு நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத் தைப்பொங்கல் அமைகின்றது.

பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்லுகின்றது. பொங்கல் பலவித மானது கோலி பண்டிகை, தைப்பொங்கள், மாட்டுப்பொங்கல், கானும் பொங்கல் என பலவிதமான பொங்கலை கொண்டாடுகின்றோம். எனவே, தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் அழுத்தங்களையும் வெற்றிபெறச்செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனை பிறாத்திப்போம்.

இன்றைய சூழ்நிலையில் கொவிட்-19 கொரோனா தொற்றிலிருந்து எம்மையும் எமது உறவினர்களையும் நண்பர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாட்டில் அன்பும் தர்மமும் தழைத்து நிலைக்கட்டும்

## சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள்

நாட்டில் அன்பும் தர்மமும் தழைத்து, நிலைக்கவேண்டும். அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் உண்டாக வேண்டும் - என இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள் தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், அவரின் வாழ்த்துச் செய்தியில்,

எமது சமயங்கள் அனைத்தும் வாழ்வியலையே போதித்து எம்மை வழிப்படுத்துவதாக அமைந்துள்ளன. தைத்திருநாள் என்பது, சூரியபகவான் தனுஷ் ராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் காலமாகும். உத்தராயண புண்ணிய கால ஆரம்பம் என போற்றப்படுகின்றது.

இன்னுமொரு வகையில் உழவர் திருநாள் நன்றிகளை தெரிவித்துக்கொள்ளும் ஒரு சிறப்பம்சம் நிறைந்த நாளாக பார்க்கப்படுகிறது.

அதாவது, உழவர்கள் தம் தொழிலுக்கு உதவிகள் புரிந்த சூரிய பகவானுக்கு நன்றிகள் பகிர்ந்து, பொங்கலிட்டு படைத்து நிவேதனம் செய்யும் ஒரு விழாவாக பண்டிகையாக நோக்கலாம். அத்துடன், அனைத்து உயிர்களையும் மதித்து அன்புடன் நன்றிகள் பகிர்ந்து கொள்வதாகவும் நாம் காணலாம்.



நாம் சமய வழி நிற்பதில், நடப்பதிலிருந்து பல்வேறு வாழ்வியல் தத்துவங்களை நடைமுறைகளை கற்றுக்கொள்ள வேண்டும். அன்பு செலுத்தி நடக்கப் பழகவேண்டும். நன்றிகளை பகிர்ந்துகொள்ளப் பழக வேண்டும்.

இயற்கையை நேசிக்கும் பாங்கினை பழக, கற்க வேண்டும். இவ்வகையில் சமயங்கள் வாழ்வியலையே போதித்து நிற்கின்றன.

அவ்வகையில் நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் அன்பு நிலைக்க வேண்டும். அறம் வேண்டும். தர்மத்தின் வழி நடக்க வேண்டும். அன்பு, அறம், தர்மம், நேர்மை, இயற்கையை மதித்தல் மேலோங்க வேண்டும். இவற்றை எல்லாம் இழப்போமானால் அல்லது மீறி நாம் நடப்போமானால் எமக்கு கிடைப்பது மிகவும் துயரம் மிகுந்த வாழ்க்கையாக அமையும்.

மலர்ந்துள்ள தைத்திருநாள் முதல் அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் பெற்று வாழ்க என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து, மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சியடைகிறோம் - என்று தெரிவித்துள்ளார்.

# நன்றியின் மகத்துவத்தினை உணரவைக்கும் திருநாளாக பொங்கல் பண்டிகை அமையட்டும்

## தொ.தே.சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளர் ஸ்ரீதரன்



உலகெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாடி மகிழும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்ற அனைவருக்கும் இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரத்தின் நாடாளுமன்ற ஆய்வாளருமான சோ.ஸ்ரீதரன் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில்,

புதுப்பானையில் பொங்கல் பொங்கும் வேளையில் "பொங்கலோ பொங்கல்" என்று அனைவரும் மகிழ்ந்து குரலெழுப்பி தத்தமது வாழ்வில் எழுச்சியை ஏற்படுத்துகின்ற பொங்கல் பண்டிகையானது தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையாகும். உழவர்களினதும் உழைப்பாளர்களினதும் உன்னத பணிக்கு உறுதுணை புரிகின்ற சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நன்னாளில் நாம் அனைவரும் நன்றியின் மகத்துவத்தினை உணரவைக்கும் திருநாளாக இந்தப் பொங்கல் பண்டிகை அமைகின்றது.

"தைத் திங்கள் தண்கயம் போல அள்ள அள்ள குறையாத செல்வங்கள்" இந்தத் திருநாள் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள். இந்த நன்மொழிக்கேற்ப உடல் உள ரீதியாக உழைக்கின்ற உழைப்பாளிகளின் வாழ்விலும் நல்வாழ்விற்கான வழிகள் பிறக்க வேண்டும்.

இத்தகைய உழவர்கள் முதல் ஏனைய தொழிலார்கள் வரை அனைவரின் வாழ்விலும் இந்தத் தைத்திருநாள் வளத்தினைப் பெற்றுத்தரட்டும். இல்லங்கள்தோறும் பொங்கட்டும் பொங்கல். இதயங்கள் தோறும் தங்கட்டும் இன்பங்கள் என்று கூறி வாழ்த்துகின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

# தைத்திருநாளில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற வேண்டும்

## திஸ்ஸ விதாரண எம்.பி.



தமிழர்களின் தனிப்பெரும் பண்டிகை தைப்பொங்கல் பெருவிழாவில் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் மக்களின் ஐதீகம். ஆனால், வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக தமிழ் மக்களின் சொத்துகளையும் உறவினர்களையும் இழந்து அம்மக்களுக்கான தீர்க்கதரிசனமாக அரசியல் தீர்வு கிடைக்கப்பெறவில்லை. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் மக்களின் ஐதீகம். அம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற நாம் பிரர்த்திக்கின்றோம் - என லங்கா சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்,

2021ஆம் ஆண்டு எமது நாட்டில் ஏற்பட்ட கொவிட் நோய் காரணமாக மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அம்மக்களால் அதிலிருந்து மீளமுடியவில்லை. பொருளாதார கஷ்டங்களிலிருந்து எப்படி மீள வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சி தற்போது அரசிடம் ஆலோசனைகளை முன்வைத்தது. ஆனால், இவ்விடயம் தொடர்பாக அரசு இதுவரை எம்மிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. தற்போதைய அரசின் மீது மக்கள் நம்பிக்கையை இழக்க தொடர்ந்துவிட்டனர்.

அம் மக்களின் நம்பிக்கையை மீண்டும் வென்றெடுக்கப்பட வேண்டுமானால் மக்களின் பொருளாதாரத்தை தரம் உயர்த்தி நிவாரண அடிப்படையில் மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி அதன்மூலம் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கி அனைவரும் சமமாக வாழவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்று குறிப்பிட்டுள்ளார்.




# விவசாயப் பெருமக்களின் வாழ்வு செழிக்கட்டும்

## தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அங்கஜன் எம்.பி.

(சாவகச்சேரி நிருபர்)



கடினமாக உழைத்து கௌரவமாக வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் வளம் வந்து சேரவேண்டும் - என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில், தைப்பொங்கல் உழவர் திருநாளாகும். விவசாயமே தமிழர்களின் ஜீவனோபாயத் தொழில். விவசாயிகள் தமது அறுவடை சிறக்க உதவிய பூமித் தாய்க்கும் சூரியபகவானுக்கும் நன்றி சொல்லும் நாளாக தைப்பொங்கல் பண்டிகையை தொன்றுதொட்டு கொண்டாடி வருகின்றனர்.

மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் புதிய ஆண்டின் தொடக்க நாளாக இத்தைத்திருநாள் அமையவேண்டும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை நிஜமாக வேண்டும்.

எமது விவசாயிகள் புதிய முயற்சியில் ஈடுபட்டு பெறுபேறுக்காக காத்திருக்கின்றனர். மண்ணுக்கும் மனிதனுக்கும் கேடு விளைவிக்கும் இரசாயனத்தை தவிர்த்து நோய் நொடிகளற்ற சுகமான வாழ்விற்கு வழிசமைக்கும் சேதன முறையிலான பயிர்ச்செய்கையே அந்த முதல் முயற்சி. எமது விவசாயிகளின் முதல் முயற்சி அமோக வெற்றியைக் கொடுத்து அதனையே மீண்டும் தொடர இந்நன்நாளில் இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ் சமூகத்தின் பண்பாடு, நாகரிகம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடும் அனைத்து உலக வாழ் தமிழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துகள் - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் முத்தமிழ் விழா



(யாழ். நிருபர்)

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது – என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

முத்தமிழ் விழா தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ். மாநகர சபையில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

16ஆம் திகதி காலைமுதல் இரவுவரை இயற்துறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம், பாலமுருகன் மற்றும் குமரனின் நாத சங்கமம், சத்தியவான் சாவித்ரி நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் உட்பட பல நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பொங்கல் பொருட்கள் அடங்கிய பொதிகளும் பானைகளும் வழங்கல்

(யாழ். நிருபர்)

நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் 2022ஆம் ஆண்டின் முதலாவது சேவையாக



வறுமைக்கோட்டுக்குட்பட்ட 50 குடும்பங்களுக்கு நேற்று பொங்கல் பொருட்கள் அடங்கிய பொதிகளும் பானைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜாவும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி கௌரியம்பாள் மாணிக்கராஜாவும் கலந்து சிறப்பித்தனர்.

# மன்னார் ஊடகவியலாளர் ஜெகனின் 'கவசம்' குறுந்திரைப்படம் வெளியீடு



(மன்னார் நகர் நிருபர்)

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் தயாரிப்பில் மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் இயக்கத்தில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட 'கவசம்' எனும் குறுந்திரைப்படம் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குறித்த குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவில் விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் ரோட்டரி கழகத்தின் தலைவர் பிரியதர்சன் இமானுவேல், நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் லூர்து நாயகம் புவனம் ஆகியோர் கலந்துகொண்டு குறுந்திரைப்படத்தினை வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தனர்.

மேலும் குறித்த நிகழ்வில் மன்னார் நகர சபை உப தவிசாளர் ஜோன்சன், மன்னார் நகர சபை உறுப்பினர்கள், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த கவசம் குறுந்திரைப் படத்தில் பங்குபற்றிய கலைஞர்களுக்கான விருதுகளும் அன்பளிப்புகளும் இதன்போது வழங்கப்பட்டன.

குறித்த குறுந்திரைப்படமானது தற்போதைய சூழ்நிலையில், கொரோனா தொற்று காலப்பகுதியில் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சுதந்திரக் கட்சியினதும் பொதுஜன பெரமுனவினதும் நாடகத்தை நம்ப மக்கள் தயாராக இல்லை

## வேலுகுமார் எம்.பி. கண்டியில் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன முன்னணியும் இணைந்தே ஆட்சி அமைக்க வழிகோலின. இன்று அவர்கள் தங்களை இரு துருவங்களாகக் காட்டி நாடகம் ஆடுகின்றனர். மக்கள் அதனை நம்பத் தயாரில்லை. ஏனெனில் அரசிடம் முறையான வேலைத்திட்டம் எதுவும் கிடையாது என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கண்டியில் நடத்திய ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசிடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. இதனால் நாளுக்கு நாள் நாடு அதல பாதாளத்தை நோக்கி செல்கிறது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மின்துண்டிப்பால் நாட்டின் கைத்தொழில்துறை முற்றாக ஸ்தம்பித்து விடும். அதனால் டொலர் பிரச்சினை மேலும் உக்கிரமடையும்.

டொலர் பிரச்சினைதான் இறக்குமதி தடைப்படக் காரணமாயின், நாட்டில் ஏற்பட்டுள்ள ஏனைய பிரச்சினைகளுக்கும் அதுவா காரணம்? அன்று பசளையை இலவசமாக வழங்குவதாகக் கூறினர். பின்னர்



காபன் பசளை வழங்குவதாகக் கூறினர். அதன் பின்னர் காபன் பசளையை இலவசமாக வழங்குவதாகக் கூறினர். அதனையடுத்து காபன் பசளை பாவிப்பவர்களுக்கு மட்டுமே நட்டஈடு வழங்குவோம் என்றனர். தற்போது எல்லாம் காற்றில் பறந்து விநாடிகளில் அரிசியை இறக்குமதி செய்ய முன் வந்துள்ளனர். நாட்டு மக்களுக்கு நஞ்சற்ற உணவை வழங்குவதற்காக காபன் பசளை திட்டம் முன்வைக்கப்பட்டதாயின் இறக்குமதி செய்யப்படும் அரிசியும் காபன் பசளையால் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியா? எனக் கேட்க விரும்புகிறேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மொட்டும் இணைந்தே நிம்மதியாக இருந்த நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்பி புதிய அரசை நிறுவின. 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தனர். அவர்கள் இரு கட்சிகளுமே இணைந்து ஆட்சி அமைக்க வழிகோலின. இப்போது வெறும் நடிப்பை காட்டுகின்றனர். இவர்கள் இருவரும் ஒன்றுதான்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது என்பது நாட்டுமக்களுக்குத் தெரியும். அதேபோல் முறையான வேலைத்திட்டமில்லாத வர்கள்தான் தற்போதைய அரசு என்பதும் நாட்டு மக்களுக்கு தெரியும். அவர்கள் நாட்டை சின்னாபின்னப் படுத்தியுள்ளதும் நாட்டு மக்களுக்குத் தெரியும். நாட்டில் செழிப்பாக இருந்த விவசாய உற்பத்தி காபன் பசளை விளையாட்டால் தவிடுபொடியானது. அமைச்சரவைக் கூட்டத்தில் மின் துடிப்பு இல்லை எனக் கூறி வெளியே வந்ததும் சில மணித்தியாலங்களில் மின் துண்டிக்கப்படுகிறது. இதற்கு வெட்கம் இல்லையா?

உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் என்பன ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. மக்களது வாக்களிக்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. தற்போது பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி ஆட்சியை தக்கவைக்க ஒரு நாடகம் திட்டமிடப்படுவதாகவும் கேள்விப்படுகிறோம். அதற்கு இடமளிக்க மாட்டோம் என்றார்.

# புளும்பீல்ட் தோட்ட குடியிருப்பில் தீ விபத்து

(க.கிஷாந்தன்)



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுண்ஸ்வீக் தோட்டம், புளும்பீல்ட் தோட்ட குடியிருப்பில் நேற்று (13) காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் (2 வீடுகள் கொண்ட குடியிருப்பு) ஒரு வீடு முற்றாக எரிந்துள்ளது.

தீ ஏற்பட்டபோது வீட்டில் யாரும் இல்லையெனவும், அயலவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அந்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.



முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என



பெருமளவிலான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்திற்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீப் பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றது.

# பலாங்கொடையில் இரத்தினக்கல் அகழ்வு அனுமதியை பயன்படுத்தி காடழிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை, புவக்கஹவெலை பகுதியில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி வளமான காடுகளை வெட்டி இரத்தினக்கல் அகழ்வதாகவும் முறையற்ற இரத்தினக்கல் அகழ்வால் சுற்றாடல் பாதிக்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வழங்கப்பட்ட நிலப்பகுதிக்கு மேலதிகமாக வளமான காடுகள் வெட்டி அழிக்கப்படுவதனால் நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாகவும் சேற்று கழிவு நீர் வடிந்து செல்வதால் குடிநீரும் வயல் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுவதாகவும் இப்பிரதேச மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். எனவே இரத்தினக்கல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட மேற்படி இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு பிரதேச மக்கள் வினயமாக வேண்டுகின்றனர்.

# இரத்தினபுரி புதிய நகரத்தில் சர்வதேச இரத்தினக்கல் நகரம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

சர்வதேச இரத்தினக்கல் நகரம் இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைக்கப்படவுள்ளது. சப்ரகமுவ மாகாணசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 15 ஏக்கர் காணியில் இந்நகரம் அமைக்கப்படவுள்ளதுடன் இலங்கை வங்கி மற்றும் பிரபல இரத்தினக்கல் வர்த்தகர்கள் இதற்கான அனுசரணையை வழங்கவுள்ளனர்.

இரத்தினக்கற்களை வாங்குதல், விற்பனை செய்தல், ஒப்பமிடுதல், சுடுதல், இரசாயன பரிசோதனை பிரிவு வங்கிகள், நீச்சல் தடாகம், வாகன தரிப்பிடம், உல்லாச பொழுது போக்கு நிலையங்கள் என்பன இப்பிரிவில் அமைக்கப்படவுள்ளதாக சப்ரகமுவ மாகாண தகவல் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் நேரடி மேற்பார்வையில் இப்பணிகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# விபசார விடுதிகள் சுற்றி வளைப்பில் 8 பேர் கைது

(கண்டி நிருபர்)

கண்டி நகரில் நடத்தப்பட்டுவந்த சொகுசு விபசார விடுதிகள் இரண்டிலிருந்து பெண்கள் 6 பேரும் ஆண்கள் இருவரும் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் (12) கைது செய்யப்பட்டுள்ளனர்.

30 வயதுக்குட்பட்ட யுவதிகள் 06 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த அவர்களில் ஒருவர் பொலன்னறுவையைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமில் ரத்நாயக்கவிற்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய, கண்டி பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்படி சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இரு ஆண்களும் மேற்படி விடுதி முகாமையாளர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களை கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சுதந்திரக் கட்சியின் நுவரெலியாவுக்கான அமைப்பாளராக சந்திரசேகரன் நியமனம்

(தலவாக்கலை நிருபர்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா அமைப்பாளராகவும் ஊடக செயலாளராகவும் மற்றும் முகாமையாளராகவும் முன்னாள் நுவரெலியா மாநகர பிரதி முதல்வர் கிருஸ்ணசாமி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நியமனத்தை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன வழங்கி வைத்தார்.

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசேகரன் குருத்தலாவ சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் கடந்த 2002 ஆம் ஆண்டு முதன் முறையாக நுவரெலியா மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அதனை தொடர்ந்து கடந்த 2006 ஆம் ஆண்டு நுவரெலியா மாநகர சபை பிரதி நகர முதல்வராக தெரிவுசெய்யப்பட்டார்.

இதனை தொடர்ந்து கடந்த 2011ஆம் ஆண்டு நுவரெலியா மாநகரசபையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அந்த மூன்று உறுப்பினர்களில் சந்திரசேகரும் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து வந்த தேர்தலில் இவர் போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த சமூக சேவையாளரான இவர் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய சீத்தாஎலியா சீதையம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் நுவரெலியா இந்து கலாசார பேரவையின் ஆயுட்கால உறுப்பினருமாவார். இவர் நுவரெலியா கால்பந்தாட்ட லீக்கிலும் உப தலைவராக இருந்தபோது கால்பந்தாட்ட வீரர்களையும் ஊக்குவித்துள்ளார். இவர் நுவரெலியா மாநகர சபை பிரதி நகர முதல்வராக இருந்த காலத்தில் ஜப்பான் நாட்டு கொல்ப் கழகத்தின் ஆதரவுடன் இலங்கையில் முதன் முறையாக கிரவுன் கொல்ப் விளையாட்டை ஆரம்பித்து வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சுபீட்சத்தின் பாதைப் புரட்சி

# அத்துகல்புர நுழைவு

## மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டம்

## மீரிகம தொடக்கம் குருணாகல் வரையான பகுதி

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர்
**ஆர்.டபிள்யூ.ஆர். பேமசிறி அவர்களின்**
அழைப்பில்

நெடுஞ்சாலைகள் அமைச்சர்
**கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவர்கள்**
மற்றும்

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்
**கௌரவ நிமல் லன்சா அவர்களின்**
பங்கேற்புடன்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமர்
**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்**

மற்றும்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி
**அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின்**
தலைமையில்

**2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பி.ப. 4.00க்கு மீரிகமவில் மக்கள் உரிமையாக்கப்படவுள்ளது. அன்றைய தினம் பி.ப. 5.00க்கு குருணாகல் யக்கபிட்டியவில் மக்கள் சந்திப்பு இடம்பெறும்.**

- இரண்டாம் கட்ட தூரம் 40.91 கி.மீ.
- பாதை 04
- நிர்மாணச் செலவு – 149 மில்லியன் ரூபா
- 5 இடைமாற்று நிலையங்கள் (மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருணாகல், யக்கபிட்டிய)
- உள்நாட்டு ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

මහාමාර්ග අමාත්‍යාංශය
நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF HIGHWAYS

මාර්ග සංවර්ධන අධිකාරිය
Road Development Authority
வீதி அபிவிருத்தி அதிகார சபை

ග්‍රාමීය මාර්ග හා අවශේෂ යටිතල පහසුකම් රාජ්‍ය අමාත්‍යාංශය
கிராமிய சாலைகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சகம்
State Ministry of Rural Roads & Other Infrastructure

# பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியில் விழுந்த குழந்தை உயிரிழப்பு

## ஹபரணை பிரதேசத்தில் பரிதாபம்

(அநுராதபுரம் நிருபர்)

பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியொன்றில் விழுந்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று ஹபரணை பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஹபரணை ஹத்தரஸ் கொட்டுவ பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் கல்ஓய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை மஹமொறகந்த, ஹதரஸ்கொட்டுவ பகுதியை சேர்ந்த ஒரு வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. உயிரிழந்த குழந்தையின் தாய், உறவினர் குழந்தையை பார்த்துக்கொள்ளுமாறு ஒப்படைத்துவிட்டு தேவை நிமித்தம் ஹபரணை பகுதிக்கு சென்றிருந்த வேளையில் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது வீட்டுத் தோட்டத்திலுள்ள பாதுகாப்பற்ற நீர் நிரம்பிய குழியில் குழந்தை விழுந்து உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதையம்மன் ஆலயத்தில் வருடாந்த பிரமோற்சவ உற்சவத்தில் வேட்டைத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பக்த அடியார்கள் கலந்துகொண்டிருப்பதை படங்களில் காணலாம்.

(படங்கள் – உடப்பு நிருபர்)

# இலங்கை - ஹங்கேரி வர்த்தக மன்றம் ஆரம்பித்துவைப்பு!

## இருதரப்பு கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வை இவ்வருட முற்பகுதியில் நடத்தவும் தீர்மானம்







ஹங்கேரிய வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் பீட்டர் சிஜார்டோவுடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பில், இலங்கை - ஹங்கேரி இருதரப்பு உறவுகளை முடிவு சார்ந்த, பலதரப்பட்ட பங்காளித்துவமாக மாற்றுவதற்கான இலங்கையின் தீவிரமான ஆர்வத்தை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் சிஜார்டோ இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எஞ்சியிருக்கும் நல்லிணக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஹங்கேரியின் அணுகுமுறையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உள்ள நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்தும் ஹங்கேரிய அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தில் ஹங்கேரி அங்கம் வகிப்பதாகவும் அதனுடன் இலங்கை முக்கியமான மற்றும் நிலையான பங்காளித்துவத்தைப் பேணி வருவதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய உலக சூழலில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உறவுகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் ஆழமாக்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இரு அமைச்சர்களும் எடுத்துரைத்தனர். இந்த நோக்கத்தில், பொருளாதார ஒத்துழைப்புக்கான இலங்கை - ஹங்கேரி கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வை இவ்வருட முற்பகுதியில் கூட்டுவதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான வரியற்ற அணுகலின் மூலம் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகள் பயனடைந்து வருவதனால், ஹங்கேரிய சந்தையை அணுகுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வசதியை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கிடையேயான இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தத்தை ஆரம்பத்தில் இறுதி செய்து, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், ஆயுர்வேதம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றிலான ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது ஆர்வம் காட்டப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் கீழ் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் இணைந்து இலங்கை - ஹங்கேரி வர்த்தக மன்றத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பது இருதரப்பு பங்காளித்துவத்தின் முக்கிய அங்கம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கு 52 மில்லியன் யூரோ கடனுதவியின் மூலம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகளை வழங்கியமைக்காக ஹங்கேரிக்கு இலங்கையின் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

2022 - 2024ஆம் ஆண்டுக்கான ஸ்டைபென்டியம் ஹங்கேரிகம் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் இலங்கைக்கும் ஹங்கேரிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது அமைச்சர் சிஜ்ஜார்டோவின் விஜயத்தின் மற்றுமொரு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ், பொறியியல், விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் நீர் முகாமைத்துவம் உட்பட பரந்த அளவிலான கல்வித்துறைகளில் இளங்கலை மற்றும் முதுகலைக் கற்கைகளை மேற்கொள்வதற்குத் தகுதியான இலங்கை மாணவர்களுக்கு ஹங்கேரி ஆண்டுதோறும் 20 புலமைப்பரிசில்களை வழங்குகின்றது. புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பயனடையும் 86ஆவது நாடாக இலங்கை உள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்புத்துறையில், பரஸ்பர நலன்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இரு வெளிநாட்டு அமைச்சுகளுக்குமிடையே வழக்கமான அரசியல் ஆலோசனைகளைக் கூட்ட வேண்டியதன் அவசியத்தை இரு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட திறப்பு விழா நாளை


## இன்று விசேட சைக்கிளோட்டப் போட்டி

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட திறப்பு விழாவுடன் இணைந்ததாக, விளையாட்டு அமைச்சு மற்றும் இலங்கை சைக்கிளோட்டுநர்கள் சங்கத்தின் முழுமையான மேற்பார்வையில் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சைக்கிளோட்டப் போட்டி தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில், கடந்த 10ஆம் திகதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று காலை 8:30 மணிக்கு மீரிகம இடைப்பரிமாற்ற வீதியில் ஆரம்பமாகி அதிவேகப் பாதையில் யக்கபிட்டிய இடைப்பரிமாற்ற வீதி வரை சென்று, அங்கிருந்து மீரிகம இடைப்பரிமாற்ற வீதியில் திருப்பி மீண்டும் அந்த வீதியூடாக மீரிகம இடைபாற்றத்திற்கு அருகில் போட்டி நிறைவடையும். இலங்கை சைக்கிளோட்டுதல் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 125க்கும் மேற்பட்ட சைக்கிளோட்டுநர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர். வெற்றியாளர்களுக்கு



50ஆயிரம் ரூபா, 30ஆயிரம் ரூபா, 25ஆயிரம் ரூபா வீதம் பரிசில் வழங்க ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

கனிஷ்ட மற்றும் திறந்த ஆண்களுக்கான சூப்பர் சைக்கிளோட்டுதல் போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா, 75ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் பணப்பரிசுகள் வழங்கப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கிணங்க, சைக்கிளோட்ட சம்மேளனம் இந்தப் போட்டிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கு முன்னர் நெடுஞ்சாலை திறக்கப்பட்டபோது பொது மக்கள் பார்வையிடுவதற்கு சில நாட்களுக்கு திறந்து வைக்கப்பட்டதுடன், சைக்கிளோட்டப் போட்டி நடத்த அனுமதிக்குமாறும் கோரப்பட்டது.

இந்தச் சைக்கிளோட்டப் போட்டி நடத்த ஒருங்கிணைப்பு நடவடிக்கை மேற்கொண்டு சைக்கிளோட்டப் போட்டி நடத்த உதவியதற்கு அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சைக்கிளோட்ட சம்பியன்களுக்கு நெடுஞ்சாலையில் சர்வதேச அனுபவத்தைப் பெறுவதற்கும் விளையாடுவதற்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் தலைமையில் நாளை 15ஆம் திகதி மாலை 4 மணிக்கு அதிவேக நெடுஞ்சாலை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனுசரணையின் கீழும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்கேற்புடனும் நாங்கள் நெடுஞ்சாலையை திறந்து வைக்க இருக்கிறோம். பெண்களுக்கான சைக்கிளோட்டும் போட்டி நிகழ்வை நடத்துமாறு எனக்கு நினைவூட்டிய ஊடகங்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன் என்றார்.

# 17 இலட்சம் சமுர்த்தி பயனாளிகளை ஊக்குவிக்க விசேட வேலைத்திட்டம்

## அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

(அநுராதபுரம் நிருபர்)

முழு நாட்டிலுள்ள 17 இலட்சத்துக்கும் அதிகமான சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது என சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி அநுராதபுரம் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இன்று முழு உலகத்திலும் பரவியுள்ள கொடூர நோயான கொரோனா தொற்றினால் எமது நாடு மட்டுமல்ல அனைத்து நாடுகளினது பொருளாதாரமும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. அப்படியான ஒரு இக்கட்டான நிலைமையிலும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கும் நிவாரணங்களை சிறிதளவேனும் குறைக்காது தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

குறைந்த வருமானம் பெறும் மற்றும் சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்களை அநுராதபுரத்தில் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், நாட்டில் 17 இலட்சத்து 60ஆயிரம் பேர் வரையில் சமுர்த்தி பயனாளிகள் காணப்படுகின்றனர்.

அவற்றில் 72ஆயிரம் பேர் அநுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றனர். நாடு பூராகவும் சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதன் மூலம் அவர்களது பொருளாதார வசதி வாய்ப்பினை விருத்தி செய்து கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பினை வழங்க முடியும். அதற்காகவேண்டியே அரசாங்கம் தற்சமயம் விசேட வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துள்ளது என்றார்.

## குற்றம் தவிர்

Police Roundup

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**ஏகொடஉயன**

ஏகொடஉயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தினசிறி மாவத்தை பிரதேசத்தில், நேற்று முன்தினம் ஏகொடஉயன பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 03 கிலோ 200 கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**கடவத்தை**

கடவத்தை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்தெனிய மயானத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எல்தெனிய, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலுக்கமைய கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்தெனிய மயானத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 13 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எல்தெனிய, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**கிராண்ட்பாஸ்**

கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டலங்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 07 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு -14ஐச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**கல்கிசை**

கல்கிசை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவரும், 02 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டு கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரும், இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது

**கித்துல்கலை**

கித்துல்கலை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கித்துல்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பான பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பான, கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்

**ரம்புக்கனை**

ரம்புக்கனை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்சலகமுவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 03 உள்நாட்டு துப்பாக்கிகளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிரிவல்லபிட்டிய, ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது

**ஹோமாகம**

மெரகஹஹேன மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் வீடுகள் மற்றும் சந்தைகளில் திருடிய பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் நுகேகொடை, மேல் மாகாண தெற்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால், ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டபன தெற்கு பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு ஹோமாகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பிட்டபன தெற்கு, ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**அம்பலாங்கொட**

அம்பலாங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குலீயாகொட பிரதேசத்தில் கல்கிசை குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீடுகள் மற்றும் கடைகளில் கொள்ளையடித்த சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் காதுடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடுகள் மற்றும் கடைகளை உடைத்து சொத்துகளை திருடிய சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர், திருடப்பட்ட கைபேசிகள் இரண்டை வைத்திருந்த சந்தேகநபரின் தாயுடன் கைதுசெய்யப்பட்டு கஹதடுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

நிதியை கொள்ளையடித்தமை மற்றும் சொத்துகளை திருடிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் பலபிட்டி நீதவான் நீதிமன்றத்தால் இவர்கள் மீது 3 பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குலீயாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 16 மற்றும் 42 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழன்
வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# SABEA விருதை வென்று SDTI கெம்பஸ் சாதனை

தெற்காசியாவின் சிறந்த தொழில்முயற்சிகளை தெரிவு செய்து விருது வழங்கி கௌரவிக்கும் விருது விழாவில் (SABEA) திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்றுவிப்பு சர்வதேச நிறுவனம் (SDTI கெம்பஸ்) சிறந்த தொழில்முறை மூலோபாய மற்றும் உயர்கல்வி நிறுவனம் எனும் விருதை வென்றுள்ளது. இந்த விருது விழா அண்மையில் கொழும்பு மொனேஸ் இம்பீரியல் ஹோட்டலில் விமரிசையாக நடைபெற்றது. சர்வதேச நடுவர் குழுவொன்றினால் 08 தெற்காசிய நாடுகள் மத்தியில் சிறந்த தொழில்முயற்சிகளை தெரிவுசெய்து விருதளிக்கும் மேற்படி விழா முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிதி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற திறன் அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்த உயர் கல்வி பாடநெறிகள், டிப்ளோமா பாடநெறிகள், பட்டப்படிப்புகள், பட்டப்பின்படிப்புகள், முதுமாணி பாடநெறிகள் மற்றும் கலாநிதி பாடநெறிகள் வரை ஏராளமான பாடநெறிகளை குறைந்த கட்டணத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மும்மொழியிலும் கற்பதற்கு SDTI கெம்பஸ் வசதிசெய்து கொடுக்கிறது.



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சகல பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கும் அரச வங்கிக் கடன்கள் மற்றும் தொழில் செய்தவாறு கட்டணம் செலுத்தும் வசதி என பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

"எமது கற்பித்தல் செயன்முறைகள் மற்றும் பாடநெறிகள் நடைமுறைச் சாத்தியமான தொழில்முறை ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேம்படுத்தும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் திறன் அபிவிருத்தியானது, தொழிலின்மையை போக்குவதற்கும் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்கும் பெரிதும் உதவுகிறது. தொழில் வல்லுனராவதற்கு வழிகாட்டுகின்ற தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற சான்றிதழ்களை வழங்குவதே SDTI கெம்பஸின் தனித்துவமாகும்" - என SDTI கல்லூரியின் அதிபர் கீர்த்தி ஸ்ரீ தேசபந்து கலாநிதி சான் பண்டார தெரிவித்தார்.

SDTI கெம்பஸ் கொழும்பு, கண்டி, குருநாகல், களுத்துறை, கிரிபத்கொடை, சிலாபம், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மாத்தளை, நுவரஎலிய, அநுராதபுரம், பண்டாரவளை, காலி, மாத்தறை, கேகாலை, பொலனறுவை மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள கிளைகள் ஊடாக பல துறைகளில் மாணவர்களுக்கு கோட்பாட்டு மற்றும் செய்முறை கல்வியை வழங்குவதோடு அதன்மூலம் மாணவர்களுக்கு மேம்பட்ட தொழில் தகைமைகளை பெறுவதற்கு உதவுகிறது. 2011 பிரதமர் விருது, 2013 – 2014 ஐக்கிய நாடுகள் கல்விக்கான தங்க விருது, 2018 தேசிய திறன் விருது, 2021ஆம் ஆண்டில் 30இற்கு மேற்பட்ட நாடுகள் மத்தியில் இந்தியாவின் ஆசிய விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வென்றுள்ளமை SDTI கெம்பஸின் மேம்பட்ட தரத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது.

# William Angliss @ SLIIT நிறுவனத்தின் ஏழாவது வருடாந்த பட்டமளிப்பு விழா

William Angliss @ SLIIT நிறுவனம் விருந்தோம்பல்துறை முகாமைத்துவம், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் சமையல் கலைத்துறை ஆகிய பிரிவுகளில் தமது வருடாந்த பட்டமளிப்பு விழாவை அண்மையில் கொழும்பு ஷெங்ரீலா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடத்தியது.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு பிரவேசிக்கின்ற புதுமுகங்களுக்கு பெரும் முக்கியத்துவமிக்க தருணமான இந்த நிகழ்வில் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களும் விருந்தோம்பல் துறையுடன் தொடர்புடையோர்களும் கலந்துகொண்டனர். சுற்றுலாத்துறை சார்ந்த முன்னணி நிறுவனங்களின் அனுசரணையுடன், மேம்பட்ட திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சிறப்பு கௌரவிப்புகளோடு William Angliss நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா பல்வேறு



சிறப்பு அம்சங்களுடன் கோலாகலமான முறையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

2021ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவின் விருந்தோம்பல்துறை முகாமைத்துவம், சமையற் கலை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் ஆகிய பிரிவு களிலான வருடாந்த பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வில் பிரதம விருந்தினராக ஷெங்ரீலா ஹோட் டலின் பொது முகாமையாளர் ஹர்விடு பொஸ்க் கலந்து சிறப்பித்தார்.

ரெஸ்ப்லெண்டன்ட் சிலோன் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் டில்மா தேயிலை / ஆதுகு ஹோல்டிங் நிறுவனத்தின் பணிப்பாளருமான மலிக் பெர்னாண்டோ முதலாவது அமர்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். பட்டமளிப்பின் இரண்டாவது அமர்வில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையுடன் தொடர்புபட்டவரும் முன்னணி விளையாட்டு வீரருமான மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணியின் வீரர் கிரன் பவெல் பிரதம விருந்தினராகவும், கோல்பேஸ் ஹோட்டலின் பொது முகாமையாளர் டேனியல் க்ரூ சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

விருந்தோம்பல் முகாமைத்துவம், சமையற் கலை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளுக்கு இந்த ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற மாணவர்களின் வளமான எதிர்காலத்துக்காக William Angliss @ SLIIT நிறுவனம் தமது நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவிக்கின்றது.

திகதி 12.01.2022
புதன்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4645
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,126,820.00
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 9 5 8 4 0 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 24,572,663.00

**கொவிசெத**
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2940
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,340,660.00
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 17 29 44 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,839,480.00

**Mega POWER**
கோடி 10
මෙගා පවර්
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 993
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,093,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 166,906,944.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: L
சுப்பர் இலக்கம்: 18
வெற்றி இலக்கங்கள்: 46 49 64 76

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 675
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,060,540.00
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 26 31 49 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 92,347,660.00

**ஜாதிக சம்பத**
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1197
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,167,860.00
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 5 1 6 2 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,712,648.40

**சுபிரி வாசனா**
சீட்டிழுப்பு இலக்கம் :1665
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,653,200.00
சுப்பர் இலக்கம்: 07
வெற்றி இலக்கங்கள்: 01 14 28 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,524,124.40

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



# சீரற்ற நிலையில் காணப்படும் வீதிகளால் மழைக்காலங்களில் மக்கள் அசௌகரியம்

## பாதைகளை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை





(நூருல் ஹுதா உமர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததன் பின்னர் கடந்த மஹிந்த அரசினால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்கள் மூன்று ஜனாதிபதிகளை மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் சந்தித்தும் இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படவில்லை என ஏக்கம் தெரிவிக்கின்றனர். அங்குள்ள வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதையும், தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும் பல தடவைகள் அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கின்றனர். மழைக்காலங்களில் பாம்பு போன்ற நச்சு விலங்குகள் வீடுகளை நோக்கி படையெடுக்கும் நிலை உள்ளதாகவும் இரவில் பொதியளவிலான வெளிச்சம் தரக்கூடிய மின்விளக்குகள் இல்லாமையால் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும், இந்தப் பிரதேசத்தின் பிரதான நுழைவாயிலாக உள்ள பாலம் கூட மிகப்பெரிய சேதத்தை அடைந்துள்ளதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதனால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் மற்றும் பல மாதங்கள் கடந்தும் வீதிய அபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிக்கற்களும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்களின் நிலையறிந்து அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி திட்டங்களில் இந்த வீதிகளை சீராக பாவனைக்கு உகந்தளவில் மாற்றித்தருமாறு அரசிடம் மக்கள் கோரிக்கை விடுப்பதுடன், கல்முனை மாநகர சபை போதியளவிலான தெருவிளக்குகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றனர்.

# தொழில்முயற்சியாளர்களுக்கு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு




(நூருல் ஹுதா உமர்)

கிராமத்திற்கு ஒரு தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பிரம்புகள், பித்தளை மட்பாண்டங்கள், மரப் பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவின் விதாதா வள நிலையத்தின் வினை முயலுனர்களுக்கான தொழில்நுட்பம்சார் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பாத்தீபன், கணக்காளர் ஜெயசர்மிகா, காரைதீவு விதாதா வளநிலைய உத்தியோகத்தர் எல்.எம்.அஸ்வர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கொட்டப்பட்டுள்ள கொங்க்ரீட் கற்களை அப்புறப்படுத்துக!

## விளையாட்டு வீரர்கள் கோரிக்கை




(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கொட்டப்பட்டுள்ள கொங்க்ரீட் கற்களை அப்புறப்படுத்துமாறு மைதானத்தை பயன்படுத்தும் விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் குடிநீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக பல வருடங்களுக்கு முன்னர் கொங்க்ரீட் வீதிகள் தோண்டப்பட்டன. அவ்வாறு தோண்டப்பட்ட கழிவு கற்களே இவ்வாறு ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதியில் கொட்டப்பட்டுள்ளன.

குறித்த மைதானத்தை பிரதேசத்திலுள்ள ஏராளமான விளையாட்டுக் கழக வீரர்களும், பாடசாலை மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு, குறித்த மைதானத்தை பிரதேசத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் உடற்பயிற்சி செய்வதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு நீண்ட வருடங்களாக கவனிப்பாரற்றுக் காணப்படும் கற்களை அப்புறப்படுத்தி அனைவரும் பயன்படுத்தும் வகையில், மைதானத்தை புனர்நிர்மாணம் செய்ய ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கல்லடி - டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி - டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் 42ஆவது வருடாந்த திருவிழா இன்று (14) வெள்ளிக்கிழமை மாலை பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 15.01.2022 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சுரூப பவனி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி கல்லடி - டச்பார் பிரதான வீதிகள் ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்ததும், கூட்டெருக்கியக்கத் திரு அவையில் ஆவியானவரின் செயற்பாடு எனும் சிந்தனைக்கமைய நற்கருணை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நவநாட் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி ஜோட்டன் ஜோன்சன், அருட்பணி ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார் ஆகியோரது சிறப்பு அருளுரைகளுடன் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

திருவிழா திருப்பலியானது 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அருட்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் (இயேசு சபைத்துறவி) அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

நவ நாட்காலங்களில் புனிதரின் பரிந்துரையால் இறையருள் பெற்றிட அந்தோனியாரின் பக்தர்களை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் கலந்துகொள்ளுமாறு ஆலய பங்குத்தந்தையுடன் இணைந்த ஆலய பரிபாலன சபையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

# கற்பகத்தரு வேலைத்திட்டத்தில் தென்னங்கன்றுகள் வழங்கிவைப்பு





(மட்டக்களப்பு விசேட நிருபர்)

வீட்டுக்கு வீடு "கற்பகத்தரு" 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் வந்தாறுமூலையிலுள்ள இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் ஏறாவூர்ப்பற்றிற்கான பிராந்திய பணிமனை வளாகத்தில் நேற்று (13) இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகளை வழங்கினார்.

அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் அதிதிகளின் உரையினைத் தொடர்ந்து, 250 பயனாளிகளுக்கு தலா மூன்று தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரின் இணைப்பாளர்கள், முற்போக்கு தமிழர் கழகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பயனாளிகளும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# நிந்தவூர் பிரதேச சபையில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்




(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் நிந்தவூர் பிரதேச சபை முன்னெடுத்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் அஷ்ரப் தாஹிர் தலைமையில் நிந்தவூர் வெளவாலோடை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது வீடு வீடாகச் சென்று டெங்கு பெருக்கத்தை தடுக்கும் வகையில் குப்பை கூளங்களை அகற்றியதுடன், உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை முறையாக அகற்றுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. இதன்போது குப்பைகளை சேகரிப்பதற்கான பைகளும் வழங்கப்பட்டன.

குறித்த சந்திப்பில் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி, நிந்தவூர் சுகாதார வைத்திய அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விவேகானந்தரின் ஜனன தினம் ஆரையம்பதியில் அனுஷ்டிப்பு




(வீரமுனை நிருபர்)

சுவாமி விவேகானந்தரின் ஜனன தினத்தினை முன்னிட்டு ஆரையம்பதி பிரதான வீதியின் எல்லையில் அமைக்கப்பட்டுள்ள விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து ஜனன தின நிகழ்வு நேற்றுமுன்தினம் (12) அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ஆற்றல் பேரவையின் தலைவருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2010ஆம் ஆண்டு காத்தான்குடி - ஆரையம்பதி பிரதான எல்லை வீதியில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலை, இனந்தெரியாத சிலரினால் அன்றிரவே உடைத்து சேதமாக்கப்பட்ட நிலையில் 2012 ஜனவரி மாதம் 10ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டது. அதனோடு இணைந்த வகையில் சமயத் தலைவர்கள், தமிழ் பெரியார்களின் திருவுருவச் சிலைகள் ஆரையம்பதி பிரதான வீதியில் நிறுவப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரையம்பதி ஆற்றல் பேரவையின் செயலாளர் கிஸ்கந்த முதலி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ஆற்றல் பேரவையின் தலைவருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் மண்முனைப்பற்று பிரதேச சபை செயலாளர் சர்வேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனைப்பற்று தேச குழு தலைவர் ஜேக்கப் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மூதூர் சீதனவெளி ஆடைத்தொழிற்சாலையை திறப்பதற்கான நடவடிக்கை முன்னெடுப்பு







(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சீதனவெளி ஆடைத்தொழிற்சாலையை திறப்பதற்கான முன்னெடுப்புகளை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மேற்கொண்டு வருகின்றார்.

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீரின் (பொறியியலாளர்) நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 5 வருடங்களுக்கு மேல் ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகின்ற சீதனவெளி ஆடைத்தொழிற்சாலையை திறப்பதற்கான நடவடிக்கைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டுள்ளதோடு, தொழிற்சாலையின் நிலைமைகளை கண்டறிவதற்காக நேற்று முன்தினம் (12) களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்டதோடு, அங்கே பொருத்தப்பட்டிருந்த தையல் இயந்திரங்களை மாற்றி புதிய இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலை இயங்குவதற்கான நடவடிக்கைகளையும் பார்வையிட்டு உரிய அதிகாரிகளிடம் தொலைபேசி ஊடாக கேட்டறிந்தார்.

சீதனவெளி ஆடைத்தொழிற்சாலையை "ஹமீதியாஸ்" நிறுவனத்தின் மூலம் மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் இதன்மூலம் மூன்று இன சமூகங்களிலிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதன்போது மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.அரூஸ் மற்றும் வட்டாரத்துக்குரிய பிரதேச சபை உறுப்பினரும் கலந்துகொண்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் 20 வீதமான வீடுகளில் டெங்கு நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிப்பு!

(கல்லடி நிருபர்)



மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 வீதத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் டெங்கு தாக்கத்தினை ஏற்படுத்தும் நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் டெங்கு தாக்கத்திற்குள்ளாகும் நிலை அதிகரித்து வருவதாகவும், இது இன்னுமொரு அபாயகரமான சூழலைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நுளம்பினைக் கட்டுப்படுத்தும் வகையில் புகை விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

டெங்கு நோயாளர் இனங்காணப்பட்ட பகுதி மற்றும் டெங்கு நுளம்புகள் இனங்காணப்பட்டுள்ள பகுதிகளில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதனின் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் இந்தப் புகை விசிறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாதத்தின் ஆரம்ப வாரத்தில் ஆறு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், டெங்கின் தாக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுவதனால் பொதுமக்கள் தங்களது சுற்றாடலை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையிலிருந்து டெங்கு அதிகரித்த நிலை ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் படிப்படியாகக் குறைந்து நவம்பர் மாதம் வரையில் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டது.

இருந்தபோதும் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழையின் பின்னர் கொரோனாவினால் முடக்க நிலையிலிருந்து வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் டெங்கின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. டிசம்பர் மாதம் 10 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தார்கள். 2022 ஆம் ஆண்டின் முதல் வாரத்திலேயே 6 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையானது எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கின்றோம். எமது டெங்கு தடுப்புக் குழுவினர் வீடுகள் மற்றும் காணிகளைச் சோதனைக்குட்படுத்திய நிலையில் 20 வீதமான வீடுகள் டெங்கு நுளம்பு பரவலுக்கு ஏதுவான வகையில் டெங்கு நுளம்புக் குடம்பிகளைக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இனங்காணப்படும் டெங்கு நோயாளர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் அடையாளப்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. இது இன்னுமொரு அபாயகரமான சூழலைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

வீட்டுக்குள்ளேயும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களிலும் டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் காணப்படலாம் என்ற அபாயத்தினைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இதேவேளை கொரோனா அச்சுறுத்தலைத் தடுக்கும் பூஸ்டர் :தடுப்பூசி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் அனைவரும் இதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

எமது பிரதேசம் இன்னுமொரு ஆபத்து நிலையினை நோக்கி நகராது இருப்பதற்காக பொதுமக்கள் தங்களது வீடுகள், காணிகள், அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் நீர் தேங்கக்கூடிய இடங்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பாத்திரங்களை அகற்றி, டெங்கு பாரிய அபாயகரமானதாக மாறாது உதவி செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இக்காலப்பகுதி புத்தாண்டு காலம் என்பதால் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், கடந்த காலத்தில் இவ்வாறான காலப்பகுதியிலேயே அதிகளவான நோயாளர்கள் இனங்காணப்பட்டதாகவும் மக்கள் மிகவும் கவனமாகச் செயற்படுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# சி.ஐ.டி. எனக் கூறி தங்க நகைகளை கொள்ளையிட்ட அறுவர் வெல்லாவெளியில் கைது

## கார், ஆயுதங்கள் மீட்பு






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் பொலிஸ் சி.ஐ.டி. எனக் கூறி வீடொன்றில் நுழைந்த கொள்ளையர்கள் ஆண் ஒருவரை கட்டிவைத்துவிட்டு அவரின் மனைவியின் தோடு மற்றும் தங்கச் சங்கிலி உட்பட இரண்டரை பவுண் தங்கநகைகளை கொள்ளையடித்துச் சென்ற 6 பேரை நேற்று முன்தினம் (12) கைதுசெய்துள்ளதுடன், கார் ஒன்று மற்றும் கொள்ளையடிக்கப் பயன்படுத்திய கோடரி, கத்தி, 3 கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை மீட்டுள்ளதாக மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதி வெல்லாவெளி பிரதேசத்தில் சி.ஐ.டி. என தெரிவித்து கொள்ளையர்கள் பெண் ஒருவரை கட்டிவைத்து அவரின் காதில் இருந்த தோடு மற்றும் தங்கச் சங்கிலி உட்பட இரண்டரை பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர். இதில் சந்தேகத்தில் இருவரை கைது செய்து விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

விசாரணையில் அவர்கள் வழங்கிய தகவலுடன் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் (12) ஓட்டமாவடி, கிரான் பிரதேச செயலக பிரிவிலுள்ள வட்டவான் மற்றும் வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரை கைதுசெய்தனர்.

இதில் 31,34,29,31 வயதுடையவர்களை கைதுசெய்துள்ளதாகவும் இவர்கள் கடந்த காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு, கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தபோது 4 பேரும் நண்பர்களாகி சிறையில் இருந்து வெளியில் வந்ததும் கொள்ளையடிப்பதற்கான திட்டங்களைத் தீட்டியுள்ளனர். வாடகைக்கு கார் ஒன்றை எடுத்துக்கொண்டு கடந்த 5 ஆம் திகதி வெல்லாவெளி பிரதேசத்தில் குறித்த வீட்டினுள் பொலிஸ் சி.ஐ.டி. என தெரிவித்து உள்நுழைந்து குறித்த பெண்ணின் கணவனின் கைகளை பின்பக்கமாக கட்டிவைத்துவிட்டு பெண்ணின் காதில் இருந்த தோடு மற்றும் கழுத்தில் இருந்த தங்கச்சங்கலி உட்பட இரண்டரை பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்து தப்பியோடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கொள்ளையடித்த தங்க நகைகளை, பினாஸ் நிறுவனம் ஒன்றில் ஒரு இலட்சத்து 91 ஆயிரம் ரூபாவுக்கு அடகு வைத்து அந்தப் பணத்தை பங்கு கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், கொள்ளைக்கு பயன்படுத்திய வாடகைக்கார் ஒன்று, 3 கையடக்க தொலைபேசி, ஆயுதங்களையும் மீட்டுள்ளதாக தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட 6 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# வீட்டு வன்முறை தொடர்பில் செயலமர்வு







(பாலமுனை நிருபர்)

கெப்சோவின் நிறுவனத்தின் அனுசரணையில் காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வு நேற்று முன்தினம் (12) காரைதீவு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வீட்டு வன்முறை, பாலியல் வன்முறை (SGBV) சம்பந்தமான சட்டத்திட்டங்களும் பாதிக்கப்பட்டவர்களைக் கையாளும் முறைகளும் எனும் தொனிப்பொருளில் ஒருநாள் பயிற்சி செயலமர்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் கெப்சோவின் அனுசரணையில் மூவின சமூகங்களையும் உள்ளடக்கிய வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் உட்பட நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு பல்கலையின் 10ஆவது உபவேந்தராக கனகசிங்கம் தெரிவு

(பதுர்தீன் சியானா)



கிழக்கு பல்கலைக்கழகத்தின் 10ஆவது உபவேந்தராக பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உபவேந்தருக்கான தேர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தெரிவுக்குழுவின் பிரகாரமும் கிழக்கு பல்கலைக்கழக பேரவையின் பிரகாரமும் முதல்நிலையில் தெரிவுசெய்யப்பட்டு மானியங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் ஜனாதிபதியினால் பேராசிரியர் கனகசிங்கம் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், முகாமைத்துவதுறையில் முதலாவது பேராசிரியரும் திருகோணமலை வளாக முதல்வராக ஆறு வருடங்கள் பதவி வகித்தவருமாவார்.

இவருடைய காலப்பகுதியிலேயே திருகோணமலை வளாகம் பாரிய வளர்ச்சியடைந்தது. கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் இவர் பீடாதிபதியாக கடமையாற்றிய காலப்பகுதியில் இவர் மட்டக்களப்பு சமூகவியலாளர், கல்வியாளர்கள் மற்றும் வர்த்தக அங்கத்தவர்களுடன் இணைந்து செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருடைய சேவையின் ஊடாக கிழக்கு பல்கலைக்கழகம் பாரிய கல்வி மற்றும் கல்விசாரா முன்னேற்றத்துடன் கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊடாக சமூகத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கும் பங்களிப்பு செய்ய ஓர் தூண்டுகோலாக அமையும் என்பதும் கற்றோர் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

# இசங்கணிச்சீமை தாறுல் பிஹாம் பாடசாலையின் வித்யாரம்ப விழா





(நூருல் ஹுதா உமர்)

அக்கறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட இசங்கணிச்சீமை வட்டாரத்தில் நீண்டகாலமாக இயங்காமல் காணப்பட்ட பாலர் பாடசாலையை 2021ஆம் ஆண்டு உயிரோட்டமான ஒரு பாடசாலையாக அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ரீ.எம்.ஐய்யூபின் அயராத முயற்சியினால் உருவாக்கப்பட்டு சிறப்பான அடைவுகளை அடைந்து நேற்று முன்தினம் (12) 2022 ஆம் ஆண்டில் வித்தியாரம்ப நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இசங்கணிச்சீமை அல்- கமர் வித்தியாலயத்தின் அதிபர் எச்.தாலிபின் தலைமையில் பாலர் பாடசாலை நிறைவேற்றுக் குழு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினரும், இப்பாலர் பாடசாலையை உருவாக்கியவருமான ரீ.எம் ஐய்யூப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதிகளாக அக்கரைப்பற்று அல்-முனவ்வரா கனிஷ்ட பாடசாலையின் அதிபரும் பிரதி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எம்.ஐ.எம்.உவைஸ் மற்றும் அஸ்- சிபாயா பாடசாலையின் அதிபர் முஹம்மட் சமீம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# இந்திய செய்திகள்

# இராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டியடிப்பு: இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்



கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள், இலங்கை கடற்படையால் விரட்டியடிக்கப்பட்டுள்ளதுடன், 10இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளின் வலைகளை வெட்டி எறிந்து இலங்கை கடற்படை அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது, கைதுசெய்யப்படுவது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அண்மையில் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 48 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

அதேபோல் கடந்த 11ஆம் திகதி கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 10இற்கும் மேற்பட்ட படகுகள் மீது கற்களை எறிந்து இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தனர். இந்நிலையில், நேற்று இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

கச்சதீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களின் பத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் இலங்கை கடற்படையினரால் விரட்டியடிக்கப்பட்டன. 15இற்கும் மேற்பட்ட கப்பல்களில் ரோந்து வந்த இலங்கை கடற்படை தமிழக மீனவர்களின் வலைகளை வெட்டி அட்டூழியம் செய்ததாக மீனவர்கள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர்.

**தமிழக மீனவர்கள் 43 பேருக்கு 27 வரை காவல் நீடிப்பு**

இதேவேளை, இலங்கை கடற்படை கைதுசெய்த தமிழக மீனவர்கள் 43 பேருக்கு ஜனவரி 27 வரை காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய மீனவர்களுக்கு காவல் நீடிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது பிரிந்த இரு சகோதரர்கள் 74 ஆண்டுகளுக்குப் பின் சந்திப்பு



இந்தியா - பாகிஸ்தானில் வசித்துவரும் இரு முதிய சகோதரர்கள் 74 ஆண்டுகளுக்கு பின்னர் நேரில் சந்தித்து மகிழ்ந்தனர்.

1947ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது குழந்தையாக இருந்த அவர்கள் இருவரும் பிரிந்துள்ளனர். முகமது சித்திக் என்பவர் பாகிஸ்தானின் பைஸ்லாபாத்திலும், அவரது அண்ணனான முகமது ஹபீப் என்பவர் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலும் வசித்து வந்துள்ளனர்.

சமூக ஊடகங்களின் உதவியால் அவர்களது இருப்பிடங்களை அறிந்த உறவினர்கள், இருவரையும் நேரில் சந்திக்க ஏற்பாடு செய்தனர். அதன்படி பாகிஸ்தானின் கர்தார்பூரிலுள்ள குருத்துவாராவில் சகோதரர்கள் நேரில் சந்தித்தனர். 74 ஆண்டுகளுக்குப் பின்னர் சந்தித்த அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு, கட்டிப்பிடித்து கண்கலங்கினர். அந்தக் காட்சி காண்போரை நெகிழ்ச்சிடைய வைத்துள்ளது.

## புதுக்கோட்டையில் முதல் ஜல்லிக்கட்டு போட்டி



பொங்கல் பண்டிகையையொட்டி, இந்த ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சன்குறிச்சியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாடிவாசலிலிருந்து சீறிப்பாய்ந்த காளைகளை, காளையர்கள் தீரத்துடன் எதிர்கொண்டனர்.

சில காளைகள், காளையர்களின் கையிலேயே சிக்காமல் நழுவி ஓடின. சில காளைகள் துள்ளிக் குதித்து மாடுபிடி வீரர்களுக்கு தண்ணி காட்டி திணறடித்தன.

நேற்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 600 காளைகளும், 300 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர். கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி போட்டி நடைபெற்று வருகிறது.

## திருடச் சென்ற வீட்டில் சமைத்து சிக்கிய திருடன்



அசாமில் திருடச் சென்ற வீட்டிற்குள், கிச்சடி சமைத்த திருடன், பொலிஸாரிடம் சிக்கிய சம்பவம் அரங்கேறியுள்ளது.

அசாம் கவுஹாத்தியின் ஹெங்கராபரி என்ற பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு, வீட்டில் உரிமையாளர்கள் இல்லாததை அறிந்துகொண்ட திருடன் ஒருவன், அந்த வீட்டிற்குள் நுழைந்துள்ளான்.

திருடச் சென்ற அவனுக்கு பசி எடுக்கவே, திருடுவதை மறந்துவிட்டு, சமையலறைக்கு சென்றுள்ளான். அங்கு உணவு ஏதும் இல்லாததால், தனக்கு பிடித்தமான கிச்சடியை சமைத்துள்ளான்.

பூட்டிய வீட்டுக்குள் ஆள் நடமாட்டம் இருப்பதை பார்த்து சந்தேகித்த அக்கம் பக்கத்தினர், திருடனை மடக்கிப் பிடித்தனர். பொலிஸாரிடமும் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அந்த திருடனை கைதுசெய்து அழைத்துச் சென்றனர். பின், சிறையிலடைக்கப்பட்ட அவருக்கு பொலிஸார் உணவு வாங்கிக் கொடுத்தனர். திருட வந்தவன் கிச்சடி சமைத்து சிக்கிய சம்பவம், மிகவும் வேடிக்கையாக இருந்ததாக அப்பகுதி மக்கள் புன்னகைத்தபடி தெரிவித்தனர்.

## "இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்"

### மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு மீண்டும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களின் காவல் மேலும் நீடிக்கப்பட்டிருப்பது மிகுந்த அதிருப்தியை தருகிறது - என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படை கைதுசெய்த தமிழக மீனவர்கள் 43 பேருக்கு ஜனவரி 27 வரை காவல் நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய மீனவர்களுக்கு காவல் நீடிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், "இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களின் காவல் மேலும் நீடிக்கப்பட்டிருப்பது மிகுந்த அதிருப்தியை தருகிறது. இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

## இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவு எப்போது?

### - அன்புமணி காட்டம்



தமிழக மீனவர்கள் மீது ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் கண்டிக்கத்தக்கது - என பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலில்,

"வங்கக்கடலில் கச்சதீவு அருகே 10 படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி விரட்டியடித்துள்ளனர்; அவர்களின் வலைகள் அறுத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன; பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவது கடந்த ஒரு வாரத்தில் இது இரண்டாவது முறையாகும். கடந்த 10ஆம் திகதி நள்ளிரவிலும் கச்சதீவு பகுதியில் இதே போன்று தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த அதிர்ச்சி மறைவதற்குள் அடுத்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் 18ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 42 மீனவர்களும், 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 13 மீனவர்களும் இலங்கை அரசால் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இன்னொருபுறம் நடுக்கடலில் இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் தொடர்கிறது. இவற்றுக்கு முடிவு எப்போது?

ஒருபுறம் இலங்கைக்கு இந்தியா நிதியுதவியும், இராணுவ உதவிகளையும் வாரி வழங்குகிறது. மறுபுறம் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரை கொடுமைப்படுத்துகிறது. இது என்ன நியாயம்? மீனவர்கள் மீதான அத்துமீறலை கைவிடும்படி இலங்கையை இந்திய அரசு எச்சரிக்க வேண்டும்" - என்று அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



தமிழகம் முழுவதும் நேற்று போகிப் பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வீடுகளில் இருந்த பயனற்ற பொருட்கள் தீவைத்து எரிக்கப்பட்டதால், அதிகாலையில் பல இடங்களில் புகைமூட்டமாகக் காணப்பட்டது.

## சமத்துவ பொங்கல்



சீர்காழி அருகே அனைத்து மதத்தினரும் ஒன்றுசேர்ந்து சமத்துவ பொங்கல் வைத்து வழிபாடு செய்துகொண்டாடினர்.

## "தைத்திருநாளும், தமிழ்ப் புத்தாண்டும் தமிழருக்கு நன்மைகளை வழங்கட்டும்!

### பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தைத்திருநாள் வாழ்த்து



"மதங்களைக் கடந்த திருநாள் என்ற பெருமையும் பொங்கலுக்கு உண்டு. இயற்கைக்கும், சூரியனுக்கும் நன்றி செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இத்திருநாளில் தமிழர்கள் வீடுகளில் தோரணம் கட்டி, புத்தாடை அணிந்து, புது நெல் குத்தி, புதுப் பானையில் பொங்கலிட்டு மற்றவர்களுக்கு கொடுத்து மகிழ்வார்கள்" - என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தமது தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தைத்திருநாளுக்காக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழர்களின் உழவையும், உழைப்பையும் போற்றும் திருநாளான தைப்பொங்கல் விழாவையும் தமிழ் புத்தாண்டையும் கொண்டாடும் தமிழ்ச் சொந்தங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தமிழர் என்றொரு இனமுண்டு, தனியே அவருக்கொரு குணமுண்டு' என்ற நாமக்கல் கவிஞரின் வார்த்தைகளுக்கேற்ப தமிழர்களின் பெருமைமிகு தனிச்சிறப்புகளில் ஒன்றுதான் தைப்பொங்கல் திருநாளாகும். அதனால்தான் இத்திருநாளுக்கு தமிழர் திருநாள் என்ற பெயர் உருவானது. அதுமட்டுமன்றி, மதங்களைக் கடந்த திருநாள் என்ற பெருமையும் பொங்கலுக்கு உண்டு. இயற்கைக்கும், சூரியனுக்கும் நன்றி செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இத்திருநாளில் தமிழர்கள் வீடுகளில் தோரணம் கட்டி, புத்தாடை அணிந்து, புது நெல் குத்தி, புதுப் பானையில் பொங்கலிட்டு மற்றவர்களுக்கு கொடுத்து மகிழ்வார்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. தமிழ்நாடு இப்போதும் ஏராளமான பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறது. சமூக நீதி, கல்வி, வேளாண்மை, வேலைவாய்ப்பு தொடர்பான நமது கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. தமிழ்ச் சொந்தங்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்; அதற்காக நாம் சிந்திய வியர்வை ஒருபோதும் வீண் போகாது என்பதை தை பிறந்ததும் வரப்போகும் செய்திகள் அனைவருக்கும் உணர்த்தும்; நமது நம்பிக்கைகள் வெல்லும்.

தமிழர்களின் தனிச்சிறப்புகளில் ஒன்று அனைவரும் நலமாகவும், வளமாகவும் வாழ வேண்டும் என்று நினைப்பதும், வேண்டுவதும்தான். தைத் திங்கள் மற்றும் தமிழ்ப்புத்தாண்டின் வேண்டுதலும் அதுவாகத்தான் இருக்க முடியும். அதன்படியே அனைத்துத் தரப்பினரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வேண்டும்; அனைவரின் துயரங்களும் தீர வேண்டும்; நாட்டில் நலம், வளம், அமைதி, மகிழ்ச்சி, சகோதரத்துவம் ஆகியவை செழிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, தமிழர்களின் வாழ்க்கையில் தைப்பொங்கல் திருநாளும், தமிழ்ப்புத்தாண்டும் அனைத்து நன்மைகளையும் வழங்கட்டும் என்று கூறி உலகத்தமிழர்கள் அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்." - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் இரண்டு இலட்சத்தை கடந்த தினசரி கொரோனா பாதிப்பு

இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு இரண்டு இலட்சத்தை கடந்துள்ளது.

ஒரே நாளில் புதிதாக 2,47,417 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், 380 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இந்தியா முழுவதும் கொரோனா தொற்றுக்குள்ளான 11,17,531 பேர் நாடுமுழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். மேலும் இதுவரை 5,488 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டிருப்பதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

# தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களுக்கு உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

## 30.78 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு



கொரோனாவிற்கு எதிராக தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு ஒமிக்ரொன் மாறுபாடு மிகவும் ஆபத்தானது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இதுகுறித்து தெரிவித்த உலக சுகாதார அமைப்புத் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் (Tedros Adhanom Ghebreyesus),

டெல்ட்டா வகை வைரஸ்களை விட ஓமிக்ரொன் வைரஸ் குறைவான வீரியத்தைக்கொண்டிருப்பதாகவும், அதேவேளை, தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு ஆபத்தான வைரஸாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, உலகளவிலான கொரோனா பாதிப்பு 55 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் கொரோனா பாதிப்பு 55 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், 1.5 கோடி பேருக்கு தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவிற்கு கடந்த வாரத்தில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**30.78 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு**

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30.78 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 55.32 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொவிட் -19 வைரஸ் இதுவரை 224 நாடுகள் மற்றும் பெருநகரங்களில் பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்திவருகிறது.

கொரோனாவை இல்லாதொழிப்பதற்கான பல்வேறு ஆய்வுகளின் பின்னர் தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டு கொரோனா பரவல் கட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், கொரோனா உருமாற்றமடைந்து டெல்ட்டா, ஓமிக்ரொன், டெல்மிக்ரொன் என பல்வேறு வடிவங்களில் மீண்டும் மிரட்டத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், உலகம் முழுவதும் இதுவரை கொரோனாவால் 31,78,31,230 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 55,32,936 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா பாதிப்புக்குள்ளானோரில் 26,30,71,757 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 4,92,26,537 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 96,058 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகின் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு வீதங்களின்படி அமெரிக்கா, இந்தியா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

அந்தவகையில் அமெரிக்காவில் 6,43,59,409 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 8,66,891 பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டாமிடத்திலுள்ள இந்தியாவில் 3,63,17,927 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,85,035 பேர் உயிரிழந்துள்ளனர். அத்தோடு பிரேஸிலில் 2,27,18,606 பேர் கொரோனா பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் 6,20,419 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஊரடங்கு காலத்தில் மது விருந்து: மன்னிப்புக் கோரினார் பிரிட்டன் பிரதமர்



கொரோனா காட்டுப்பாடுகளை மீறி, ஊரடங்கு காலத்தில் மது விருந்தில் கலந்துகொண்டதற்காக பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் அந்நாட்டில் முழு ஊரடங்கு அமுலிலிருந்தபோது, லண்டன் டவுனிங் வீதியிலுள்ள தனது அலுவலக கார்டனில் நடைபெற்ற மது விருந்தில் பொரிஸ் ஜோன்சன் கலந்க்கொண்டார்.

ஊரடங்கு விதிகளை மீறி பிரதமரே இவ்வாறு செய்ததற்கு கண்டனம் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்கள், அவர் பதவி விலக வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மன்னிப்புக் கோரிய பொரிஸ் ஜோன்சன், விதிகளை உருவாக்குபவர்களே அதனை சரியாக பின்பற்றாதது குறித்து மக்கள் தன் மீது கொண்ட கோபத்தை புரிந்துகொண்டதாக தெரிவித்துள்ளார்.

## உக்ரைன் விவகாரம்: ரஷ்யா - நேட்டோ பேச்சு



உக்ரைன் விவகாரத்துக்குத் தீர்வு காண்பதற்காக ரஷ்யாவுக்கும் நேட்டோ உறுப்புநாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

உக்ரைன் விவகாரம் குறித்து ரஷ்யா மற்றும் நேட்டோ உறுப்புநாடுகள் இடையிலான பேச்சு பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸில் நடைபெற்றது.

இந்த விவகாரத்தில் ஒருமித்த கருத்து எட்டுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்று கூறப்படுடம் நிலையில், பேச்சுவார்த்தைக்கு முன்னர் செய்தியாளர்களைச் சந்தித்த நேட்டோ பொதுச் செயலர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க், ரஷ்ய வெளியுறவுத்துறை இணையமைச்சர் அலெக்ஸாண்டர் கிரஷ்கோ, பாதுகாப்புத்துறை இணையமைச்சர் அலெக்ஸாண்டர் ஃபாமின் ஆகியோர் இறுக்கமான முகத்துடன் காணப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அவர்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்வதையும் தவிர்த்தனர்.

பிரஸ்ஸெல்ஸிலுள்ள நேட்டோ தலைமையகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், அமெரிக்கக் குழுவுக்கு அந்த நாட்டு வெளியுறவுத்துறை இணையமைச்சர் தலைமை வகித்தார்.

முன்னதாக, உக்ரைன் விவகாரம் குறித்து அமெரிக்காவுக்கும் ரஷுயாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவா நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் அமெரிக்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் வெண்டி ஷெர்மானும் ரஷ்ய வெளியுறவுத்துறை இணையமைச்சர் செர்கெய் ரியப்கோவும் பங்கேற்றனர்.

அதன் தொடர்ச்சியாக ரஷ்ய - நேட்டோ இடையிலான பேச்சு தற்போது நடைபெற்றுள்ளது.

ஜெனீவாவில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற சந்திப்பின்போது இருதரப்பு பாதுகாப்புப் பேச்சை பல கட்டங்களாகத் தொடர அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டினும் ஒப்புக்கொண்டனர்.

அதன் ஒரு பகுதியாக நேட்டோ அமைப்புடன் தற்போது ரஷ்யா பேச்சு நடத்தியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் ஐரோப்பிய நாடுகளுக்கான பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்புநாடுகள் இந்த விவகாரம் குறித்து நேற்று விவாதித்தன என அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சோவியத் யூனியன் கடந்த 1991ஆம் ஆண்டில் சிதறுண்டபோது, அதில் அங்கமாக இருந்த உக்ரைன் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. எனினும், அந்த நாட்டில் ஐரோப்பிய செல்வாக்கு அதிகரித்துவிடக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. உக்ரைனில் நேட்டோ நிலைகள் அமைக்கப்பட்டால் தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என ரஷ்யா அஞ்சுகிறது.

இந்நிலையில், உக்ரைன் எல்லையருகே ஏராளமான படையினரை ரஷ்யா குவித்து வருகிறது.

உக்ரைன் மீது படையெடுத்து அந்த நாட்டை இணைத்துக்கொள்ள ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் கூறி வருகின்றன. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்து வருகிறது.

அந்தப் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சிகளில் ஒரு பகுதியாக தற்போது ரஷ்யாவுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் இடையே பல கட்டங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

## கசகஸ்தான் போராட்டம்: மேலும் 1,678 பேர் கைது



கசகஸ்தான் போராட்டம் தொடர்பாக மேலும் 1,678 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வாரம் நடைபெற்ற வன்முறைப் போராட்டங்களில் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று 24 மணிநேரத்தில் மட்டும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 1,678 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றனர்.

இத்துடன், சோவியத் ஒன்றியத்திடமிருந்து கசகஸ்தான் சுதந்திரம் பெற்றதிலிருந்து அந்த நாடு இதுவரை கண்டிராத இந்தத் தீவிர போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரமாக அதிகரித்துள்ளது. ரஷ்யா - சீனா இடையே அமைந்துள்ள மத்திய ஆசிய நாடான கசகஸ்தானில், வாகனங்களில் பயன்படுத்தப்படும் திரவ பெற்றோலிய வாயுவின் (எல்பிஜி) விலை திடீரென மிக அதிகமாக உயர்த்தப்பட்டது.

இதனை எதிர்த்து கடந்த வாரம் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 164 பேர் உயிரிழந்ததாக அரசு தெரிவித்துள்ளது.

## சீனாவின் ஸீரோ கொவிட் கெடுபிடி:

# இரும்புக் கென்ரெய்னர்களில் 20 மில்லியன் பேர் அடைப்பு



சீனாவில்தான் கொரோனா நோயாளி முதன்முதலில் கண்டறியப்பட்டாலும் அங்கிருந்துதான் உருவானதா என்ற ஆராய்ச்சிகள் இரண்டாண்டுகளுக்கும் மேல் நீண்டுகொண்டிருக்கின்றன.

இந்நிலையில், 'கொரோனா இல்லாத தேசம்' என்ற இலக்கை நோக்கி நகரும் சீனா, ஒரேயொரு நோயாளி கண்டறியப்பட்டாலும் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் அப்பகுதியிலுள்ள ஒட்டுமொத்த மக்களையும் குவாரன்டைன் முகாம்களுக்கு அனுப்பி கட்டாய தனிமைப்படுத்துதலுக்கு உட்படுத்தி வருகிறது.

இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களிலிருந்து தற்போது சர்வதேச வலைத்தளங்களுக்கு கசிந்துள்ளன.

**குவாரன்டைன் முகாம்களா? வதை கூடங்களா?**

இரும்பு கென்ரெய்னர்களில் இலட்சக்கணக்கான மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"zero Covid" என்ற கொவிட் தடுப்பு நடவடிக்கைக்காகவே அரசு இவ்வளவு சர்வாதிகாரப் போக்குடன் நடப்பதாக மக்கள் வேதனைப்படுகின்றனர். கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியோர் என விதிவிலக்கில்லாமல் இந்த முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த இரும்புப் பெட்டிக்குள் ஒரு மரக்கட்டில், ஒரு மலசலகூடம் மட்டுமே இருக்கிறது. இதில் இரண்டு வாரங்கள் வரை அவர்கள் தங்கியிருக்கவேண்டும். அதன் பின்னர் பரிசோதனை செய்யப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

அதேபோல், ஆங்காங்கே தீவிர லொக்டவுன்களையும் சீனா அமுல்படுத்தி வருகிறது. சீனாவில் லொக்டவுன் என்றால் அதில் சிறு தளர்வு கூட காண முடியாது. அண்மையில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் மருத்துவமனை செல்லக்கூட கெடுபிடி விதிக்கப்பட்டதால் அவருக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. மக்கள் லொக்டவுனுக்கு அஞ்சி அத்தியாவசியப் பொருட்களை பயத்தில் வாங்கிக் குவிக்கும் 'பேனிக் பையிங்' அதிகரித்துள்ளது.

ஒரு குடியிருப்பில் ஒருவருக்கு கொரோனா உறுதியானாலும் கூட ஒட்டுமொத்த குடியிருப்பையும் அப்புறப்படுத்தி முகாமுக்குக் கொண்டுசென்று விடுகின்றனர். சிலநேரம் நள்ளிரவில் கூட இந்த அப்புறப்படுத்தும் நிகழ்வு நடைபெறுகிறது என்று மக்கள் வேதனையுடன் பகிர்ந்துள்ளனர்.

டியான்ஜின் நகரில் மக்களை முகாம்களுக்கு அழைத்துச் செல்ல அணிவகுத்து நிற்கும் பஸ்களின் வீடியோவை ஒருவர் பகிர்ந்துள்ளார்.

**20 மில்லியன் பேர் அடைப்பு:**

இப்போதைய நிலைவரப்படி சீனாவில் 20 மில்லியன் மக்கள் இதுபோன்ற இரும்புப் பெட்டிகள்கொண்ட குவாரன்டைன் முகாம்களில் அடைப்பட்டுக் கிடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் ஸீரோ கொவிட் நடவடிக்கை மீது உலக நாடுகளின் பார்வை திரும்பியுள்ளது. இதனால் சீனா கடும் விமர்சனங்களை எதிர்நோக்கியுள்ளது.

## 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி செலுத்துவதை சட்டமாக்க ஜேர்மனி அரசு முடிவு



ஜேர்மனியில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி செலுத்துவதை சட்டமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் ஓலாப் ஷோல்ஸ் (Olaf Scholz), 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்வதை கட்டாயமாக்குவது குறித்த மசோதா விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றும் மார்ச் மாதம் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## சிம்பாப்வேயில் ஊரடங்கு: கருவுற்ற 5,000 மாணவிகள்

சிம்பாப்வேயில் ஊரடங்கு விதிகளால் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கும் சிறுமிகள் மத்தியில் கருவுறுதல் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மீண்டும் பாடசாலைகளைத் திறக்க கோரிக்கை எழுந்துள்ளது.

சுமார் ஒன்றரை கோடி மக்கள் தொகைகொண்ட அந்நாட்டில், 2020 மார்ச் முதல் ஊரடங்கு அமுலில் இருந்துவரும் நிலையில், அவ்வப்போது சில பாடசாலைகள் திறக்கப்பட்டன.

இந்நிலையில், குழந்தைகளுக்கான பாலியல் குற்றச் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தாத காரணத்தினாலும், வறுமை, கலாசார மற்றும் மத அடிப்படையிலான நம்பிக்கை காரணத்தினாலும் பல சிறுமிகள் கருவுற்று உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஊரடங்கு உத்தரவால் கருக்கலைப்பு மாத்திரைகள் வாங்குவதற்கு வழியில்லாத 13 வயது சிறுமிகள் கூட குழந்தை



பெற்றெடுத்த அவலம் நடந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

2021 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் 5 ஆயிரம் பாடசாலை மாணவிகள் இவ்வாறு கருவுற்றுள்ளதாக அந்நாட்டின் பெண்கள் விவகாரத்துறை அமைச்சர் Sithembiso Nyoni கவலை தெரிவித்துள்ளார்.

# ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணம் இன்று ஆரம்பம்;
# முதல் நாளில் ஸ்கொட்லாந்துடன் மோதும் இலங்கை



14ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது மேற்கிந்திய தீவுகளில் இன்றைய தினம் ஆரம்பமாகிறது. மொத்தமாக 16 அணிகள் பங்கேற்கின்ற குறித்த ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணத் தொடரில் ஏ.பி.சி.டி. என்ற அடிப்படையில் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் தலா 4 அணிகள் வீதம் இடம்பெற்றுள்ளன.

மொத்தமாக 48 போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி மாபெரும் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இன்று போட்டிகள் ஆரம்பமாகும் நிலையில், இன்றைய தினம் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. அதாவது குழு 'டி'யில் இடம்பிடித்திருக்கின்ற அணிகளுக்கான இரு போட்டிகள் இன்றைய தினம் நடைபெறுகின்றன. அந்த வகையில் குழு 'டி'யில் இடம்பிடித்திருக்கும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் இன்றைய தினம் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஸ்கொட்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

இன்றைய தினம் நடைபெறும் மற்றுமொரு போட்டியில் தொடரை நடத்தும் மேற்கிந்திய தீவுகள் - அவுஸ்திரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்தப் போட்டியும் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

ICC U19 MEN'S CRICKET WORLD CUP WEST INDIES 2022

உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னதாக நடைபெற்ற இரண்டு பயிற்சிப் போட்டிகளிலும் இலங்கை அணி அபாரமான வெற்றிகளை பதிவுசெய்திருந்தது.

அயர்லாந்து அணியுடன் 128 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணி, உகன்டா அணியுடன் நடைபெற்ற மற்றுமொரு பயிற்சிப் போட்டியில் 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி ஒன்றை பதிவுசெய்தது. அது மாத்திரமல்லாது உலகக்கிண்ணத் தொடரின் பயிற்சிப் போட்டிகளுக்கு முன்னர் நடைபெற்ற இளையோர் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் காரணமாக நியூசிலாந்து அணி குறித்த இளையோர் உலகக்கிண்ணத் தொடரிலிருந்து விலகியிருக்கும் நிலையில், நியூசிலாந்து அணிக்கு பதிலாக ஸ்கொட்லாந்து அணி சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நடப்பு சம்பியனாக பங்களாதேஷ் அணி காணப்படுகிறது.



# பிடியெடுப்பில் சதமடித்த கோஹ்லி

தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வீரர் டெம்பா பவுமாவின் பிடியெடுப்பை கைப்பற்றியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் விராட் கோஹ்லி மற்றுமொரு புதிய மைல்கல்லை எட்டினார். அதாவது விராட் கோஹ்லி டெஸ்ட் அரங்கில் தனது 100ஆவது பிடியெடுப்பை நிகழ்த்தினார். விராட் கோஹ்லி 99 டெஸ்டில் 168 இன்னிங்ஸில் 100 பிடியெடுப்புகளை நிகழ்த்தியுள்ளார். டெஸ்ட் அரங்கில் 100 பிடியெடுப்புகளை நிகழ்த்திய 6ஆவது இந்திய வீரர் விராட் கோஹ்லி ஆவார். தற்போது இந்திய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் ராகுல் டிராவிட் 163 டெஸ்டில் 299 இன்னிங்ஸில் (1996 முதல் 2012 வரை) 209 பிடியெடுப்புகளை நிகழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

முன்னாள் வீரர்களான வி.வி.எஸ்.லட்சுமண் (135), சச்சின் டெண்டுல்கர் (115), சுனில் கவாஸ்கர் (108), மொஹமட் அசாருதீன் (105) ஆகியோர் அதற்கு அடுத்தடுத்த நிலைகளில் உள்ளனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# புதிய இரு ஐ.பி.எல். அணிகளுக்கு ரூ. 33 கோடி நிர்ணயம்:
# 22ஆம் திகதிக்கு முன் பட்டியலை சமர்ப்பிக்க உத்தரவு

2022 ஐ.பி.எல். தொடரில் புதிதாக உதயமாகும் அஹமதாபாத் மற்றும் லக்னோ அணிகளுக்கு தங்கள் அணி சார்பாக அதிகபட்சம் ரூ. 33 கோடி (இந்திய மதிப்பு) வரை செலவுசெய்து மூன்று வீரர்களை தெரிவுசெய்துகொள்ளலாம் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் முதல் தெரிவு வீரருக்கு 15 கோடி ரூபாவும், இரண்டாவது தெரிவு வீரருக்கு 11 கோடி ரூபாவும், மூன்றாவது தெரிவு வீரருக்கு 7 கோடி ரூபாவும் இந்த இரு அணிகளும் செலவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவே அணிகள் இரண்டு வீரர்கள் மட்டுமே தெரிவுசெய்ய விரும்பினால் 14 மற்றும் 10 கோடி ரூபாவை மட்டுமே பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறாக, அணிகளின் விருப்பம் ஒரேயொரு வீரராக இருக்கும் பட்சத்தில் அவரை தெரிவுசெய்ய அதிகபட்சம் 14 கோடி ரூபாவரை மட்டுமே பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 12 மற்றும் 13ஆம் திகதிகளில் பெங்களூரில்




மெகா ஏலம் நடைபெறவுள்ளதாக ஐ.பி.எல். நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

லக்னோ அணிக்கு கே.எல். ராகுலும், அஹமதாபாத் அணிக்கு ஹார்திக் பாண்ட்யாவும் தலைவராக செயற்பட வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது. இரு அணிகளும் தெரிவுசெய்துள்ள வீரர்களின் பட்டியலை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

BEIJING 2022
இன்னும் 1 நாட்கள்

# பீஜிங்கில் வெளிநாட்டு மாணவர்களின் விளையாட்டு அனுபவம்

(அக்ஸரா)

பீஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக் ஆரம்பமாகிவிட்டதால், பனிச்சறுக்கு மற்றும் பனிச்சறுக்கு பந்தயத்தில் சைக்கிள் ஓட்டுதல் உள்ளிட்ட விளையாட்டுகள் மூலம் சர்வதேச மாணவர்கள் பனி மற்றும் பனியின் அழகை அனுபவிக்க உதவும் வகையில் குளிர்கால விளையாட்டுக் கூட்டத்தை பல்கலைக்கழகம் ஏற்பாடுசெய்துள்ளது.



பல்கலைக்கழகத்தின் சர்வதேச கல்விப் பாடசாலையின் துணை இயக்குநர் மா சின் கருத்துப்படி, தான்சானியா, பிஜி, சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் போன்ற ஏழு நாடுகளைச் சேர்ந்த 27 சர்வதேச மாணவர்கள் பீஜிங்கில் விளையாட்டை அனுபவிக்கிறார்கள்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சீனாவுக்கு வந்து இப்போது நிங்சியா மருத்துவப் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்து வருபவர் ரிச்சர்ட் ஜூரிஸ்ட். வடமேற்கு சீனாவின் நிங்சியா ஹூய் தன்னாட்சிப் பிராந்தியத்தின் தலைநகரான யின்சுவானிலுள்ள ரிசார்ட்டில் 30 வயதான தான்சானியாவைச் சேர்ந்த இவர், தனது வாழ்க்கையில் முதல்முறையாக பனிச்சறுக்கலை விளையாடினார். "என் நாட்டில் குளிர்காலம் இல்லை. நான் குளிர்கால விளையாட்டுகளுடன் தொடர்புகொள்ளவில்லை. ஆனால், புதிதாக ஒன்றை முயற்சிக்க விரும்புகிறேன்'' என தன் அனுபவத்தை விவரித்தார்.



தான்சானியா கிழக்கு ஆபிரிக்க நாடாகும். இது பூமத்தியரேகைக்கு தெற்கே அமைந்துள்ளது, ஆண்டு முழுவதும் வெப்பமான காலநிலை உள்ளது. ரிச்சர்ட் விளையாட்டுகளை விரும்புகிறார். ஆனால், குளிர்கால விளையாட்டுகளை முயற்சித்ததில்லை. அவற்றை தொலைக்காட்சியில் மட்டுமே பார்த்திருக்கிறார். பனிக்குழாயில் இரண்டு சுற்றுகள் சறுக்கிய பிறகு, பிஜியைச் சேர்ந்த 23 வயதான சந்த் ஆனந்திகா இன்னும் உற்சாகமாக இருக்கிறார். சீனாவில் அவள் படிக்கும் ஐந்தாண்டு காலத்தில் பனி மற்றும் பனிக்கு மிக அருகில் இருப்பது இதுவே முதல் முறை.

"நான் சீனாவுக்கு வரும்வரை நான்கு பருவங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பனியை நானே பார்ப்பதற்கு முன்பு, அது நீலமாக இருக்கும் என்று நான் எப்போதும் நினைத்தேன். அதனால்தான் பீஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக்கை தூய வெள்ளை மற்றும் தெளிவான நீலம் என்று நான் விவரிக்கிறேன். அது தொடங்கும்போது அந்தக் காட்சியில் இருக்கும் வாய்ப்பை நான் பெற விரும்புகிறேன்'' - என்றார்.

"நான் சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துவேன். என்னைப் பொறுத்தவரை சிவப்பு என்பது செழிப்பு, வெற்றி மற்றும் பொது மகிழ்ச்சியைக் குறிக்கிறது, மேலும் சீனாவிலுள்ள மக்களைப் பார்க்கும்போது, சீனாவிலுள்ள சர்வதேசியர்கள் கூட, நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்'' என்று சிம்பாப்வேயைச் சேர்ந்த சந்தின் அணி வீரர் டேவிஸ் முனாஷ கூறினார்.

டேவிஸ் பல குளிர்கால விளையாட்டுகளையும் முயற்சித்துள்ளார். குறிப்பாகா ஸ்கேட்டிங் மற்றும் பனிச்சறுக்கு. "அவை நான் நினைத்ததுபோல் எளிதானவை அல்ல. ஆனால், ஒரே மாதிரியானவை, மிகவும் உற்சாகமானவை மற்றும் மிகவும் சுவாரஸ்யமானவை'' என்று அவர் கூறினார்.

பீஜிங் விளையாட்டுகள் சீனாவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு புது அனுபவத்தைக் கொடுத்துள்ளது.

# தேசிய வலைப்பந்தாட்டத் தொடர் அடுத்த வாரம் ஆரம்பம்

தேசிய வலைப்பந்தாட்டத் தொடர் அடுத்த வார சனி, ஞாயிறு தினங்களில் திகன விளையாட்டுத் தொகுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் ஒழுங்குசெய்யப்பட்ட குறித்த தேசிய வலைப்பந்தாட்டத் தொடரானது கொவிட்-19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பல சவால்களைத் தொடர்ந்து தேசிய வலைப்பந்து சம்மேளனத்தினால் மீண்டும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இந்தத் தொடரில் நாடுபூராகவும் இருந்து 30 வெவ்வேறு அணிகள் பங்கேற்கின்றன.



2022ஆம் ஆண்டுக்கான ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில் பங்கெடுக்கும் இலங்கை வலைப்பந்து அணிக்கு மேலதிக வீராங்கனைகளை தெரிவுசெய்யும் ஒரு களமாகவும் குறித்த தேசிய வலைப்பந்தாட்டத் தொடர் அமைகிறது.

இறுதியாக கடந்த 2018ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்றிருந்த ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை வலைப்பந்து அணி சம்பியன் பட்டம் வென்றிருந்ததோடு, இந்த ஆண்டிலும் தமது சம்பியன் பட்டத்தினை தொடர்ந்து தக்கவைப்பதற்கு போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம் 2019ஆம் ஆண்டுக்கான வலைப்பந்து உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியிருந்த இலங்கை வலைப்பந்து அணி 15ஆவது இடத்தினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியில் மீண்டும் குசல் மெண்டிஸ்

சிம்பாப்வே அணியுடன் நடைபெறவுள்ள 3 பேர் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருக்கான இலங்கை அணியின் குழாம் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியானது.

தசுன் சானக்க தலைமையிலான 17 பேர் கொண்ட குறித்த குழாமில், கடந்த ஆண்டு இங்கிலாந்தில் வைத்து உயிரியல் பாதுகாப்பு விதிமுறைகளை குற்றச்சாட்டின்பேரில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒரு வருடத்தடையினைப் பெற்றிருந்த குசல் மெண்டிஸ், அந்தத் தடை பாதியிலேயே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நீக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக இலங்கை அணிக்குத் திரும்பியுள்ளார்.



அண்மையில் நிறைவடைந்த 2ஆவது எல்.பி.எல். தொடரில் திறமையினை வெளிப்படுத்தியிருந்த தினேஷ் சந்திமால், கமிந்து மெண்டிஸ், நுவான் பிரதீப், சிரான் பெர்னாண்டோ, ஜெப்ரி வன்டர்செய் மற்றும் சாமிக்க குணசேகர ஆகியோருக்கும் இலங்கை குழாமில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

**இலங்கை அணியின் குழாம்**

தசுன் சானக்க (அணித்தலைவர்), பெத்தும் நிஸ்ஸங்க, மினோத் பானுக்க, தனஞ்ஜய டி சில்வா, சரித் அசலன்க, சாமிக்க கருணாரட்ன, மகீஷ் தீக்ஷன, ஜெப்ரி வன்டர்செய், நுவான் துஷார, ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம, துஷ்மந்த சமீர, சாமிக்க குணசேகர, தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், நுவான் பிரதீப், சிரான் பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ்.

# மீண்டும் வருகிறார் பானுக! ஓய்வு கடிதம் மீளப்பெறப்பட்டது

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த 3ஆம் திகதி அறிவித்த இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பானுக ராஜபக்ஷ, நேற்று முன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் தனது ஓய்வு கடிதத்தை மீளப்பெறுவதாக தெரிவித்து இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பானுகவின் ஓய்வு அறிவிப்பைத் தொடர்ந்து, லசித் மலிங்க உட்பட பல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அவரது ரசிகர்கள் பலர் ஓய்வு குறித்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தனர். இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் வீரர் பானுக ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார்.



இந்த சந்திப்பின்போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஓய்வு முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு பானுக ராஜபக்ஷவிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையிலேயே பானுக ராஜபக்ஷ ஓய்வு குறித்த முடிவினை மீளப்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

## வாசகர்களே!

உங்கள் பிரதேசங்களில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள், போட்டிகள் தொடர்பான செய்திகளை 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், அது தொடர்பில் சுருக்கமாக எழுதி உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு thamilansports@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7